எத்திசையும் புகழ் மணக்கும்

தமிழகம்

விவேகானந்தர் நினைவு மண்டபம்,
கன்னியாகுமரி.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்தேன்
வந்து பாயுது காதினிலே' —பாரதியார்.

கலைக்கோவில்கள் நிறைந்த தமிழர்களின் தாயகம்

தமிழ் நாடு— தமிழர்களின் தாயகம். இங்கு பேசப்படும் மிகத் தொன்மை யான மொழியைக் கொண்டே இம் மாநிலத்தின் அழகுப் பெயர் அமைந் துள்ளது.

தமிழ்— மிகப் பழமையான, மிக வளர்ச்சிபெற்ற இந்திய மூத்த மொழிகளில் ஒன்று. இம் மாநிலத்தின் வரலாற்றை வடிப்பதாயின் அது கணக்கில் அடங்காத காவியங்களாக விரியும்.

தனித் தன்மை வாய்ந்த இனப் பெருமை கொண்டதே இம்மண். எனினும், இந்தியப் பண்பாடுகளோடு இரண்டறக் கலந்து நிற்கும் ஒரு பகுதியாக, மாபெரும் நாகரிகத்தின் கனிச் சோலையாக இம் மாநிலத்தின் வரலாறு மணம் வீசிக் கமழ்கிறது.

தமிழ் நாடு— கோவில்கள் மலிந்த கலைக் கோட்டம்; இங்கே, ஆயிரக் கணக்கில் எழுந்துள்ள ஆலயங்கள் அந்தந்தக் கால நிலையை, சிற்பக் கலையின் எழிலை, தங்களை எழுப்பிச் சிறப்பித்த ஏந்தல்களைக் கண்ணாடி போல் காட்டும் வார்ப்படங்கள்.

தமிழகத்தின் எழுத்து வடிவம் பெற்ற வரலாறு கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் தொடங்குகிறது. கி.பி. 14ஆம் நூற்றாண்டுவரை சேர, சோழ, பாண்டிய பல்லவர் வரலாறாகவே பெரும்பாலும் அது அமைந்துள்ளது. இவர்களில் சிலர் பேரரசுகள் அமைத்த பெருமன்னர் கள்; பொதுவாக அனைவருமே புகழ் பெற்ற கலாச்சாரப் புரவலர்கள்.

தமிழ்நாட்டின் வடக்கே பல்லவர் களும், தெற்கிலும் தென்மேற்கிலும் பாண்டிய சேரர்களும், கிழக்கே சோழர்களுமாகத் தனித்தனியே கோலோச்சினாலும் பெரும்பாலும் ஒப்புரவு கொண்டவர்களாகவே வாழ்ந் திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கலாச்சாரம் ஏசுநாதர் பிறந்த முதல் சில நூற்றாண்டுகளிலேயே சீன நாட்டின் எல்லைவரை பரவி யிருந்திருக்கிறது. அதற்குரிய அடை யாளச் சின்னங்கள் கம்போடியா, வியட்நாம், மலேசியா முதலான கீழைநாடுகளில் இன்றும் காணப்படு கின்றன. கம்போடியாவிலும், வியட்நாமிலும் உள்ள தெருக்கள், 'வீதிகள்' என்னும் தமிழ்ச் சொல்லி னாலேயே இன்றைக்கும் வழங்கப்படு கின்றன.

தென்னாட்டின் மீது முகமதியரின் முதல் படையெடுப்பு கி.பி. பதினான் காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்றது. புதிதாக நிறுவப் பெற்ற ஆற்றல் மிக்க விசயநகரப் பேரரசின் தலைமையின் கீழ், இந்துக்கள், அந்நிய நாகரிகங்களின் ஆதிக்கம் ஊடுருவாமல் தடுப்பதற் காக மூன்று நூற்றாண்டுக்காலம் போராடினர். படிப்படியாக விசய நகரப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர், மதுரை நாயக்கமன்னர்கள் 1649ஆம் ஆண்டு முதல் தமிழகத்தை ஆளத் தொடங்கினர். அவர்களது ஆட்சி யில் அமைதி, ஒற்றுமை, செழுமை யாவும் தவழ்ந்தன.

பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப் பிய வணிகச் செல்வாக்குகள் சென்னையிலும் பிற தென்னகப் பகுதிகளிலும் வேறூன்றத் தொடங்கின.

பதினேழாம் நூற்றாண்டில் 'கிழக்கு இந்தியக் கம்பெனி' தோன்றி வலிமை பெற்றதும், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையைத் தலைமைப் பீட மாகக் கொண்டு ஆங்கிலேயர்கள் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டியதும், தமிழகத்தின் பிந்திய வரலாறுகள் ஆகும். இந்தியா விடுதலை பெற்று ஒன்பது ஆண்டுகள் கழித்து, தமிழ் பேசப்படும் தென்னகப் பகுதிகள் யாவும் ஒன்றாக இணைக்கப் பெற்று இன்றுள்ள நிலையில் தமிழ் நாடு உருவெடுத்தது.

நில அமைப்புக் கூறுகள்

தமிழ் நாடு — இந்தியத் தீபகற்பத்தின் தென்கோடியில் அமைந்துள்ளது. அதன் நீண்ட கிழக்கு எல்லையை வங்காள விரிகுடாக் கடல் நீராட்டுகின்றது. புவியியல் அமைப்புப்படி அதனை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். ஒன்று, கடற்கரையை ஒட்டி இணையாகச் செல்லும் பரந்த சமவெளிப் பகுதி; இன்னொன்று மேற்கு மலைத் தொடர்களோடு இணைந்து விடும் பீடபூமிப் பகுதி. இந்த இரு பகுதிகளுக்கும் இடையே உடைந்த சங்கிலிக் கரணைகள் போன்று அமைந்த தாழ்ந்த குன்றுகள்தான் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்.

இந்த மாநிலத்தின் பரப்பளவு 1,30,069 சதுர கிலோ மீட்டர்கள். வடக்கே ஆந்திர மாநிலமும், வட மேற்கில் கருநாடகமும், மேற்கே கேரளமும், தெற்கில் இந்து மாக்கடலும், கிழக்கில் வங்காள விரிகுடாவும் எல்லைகளாக இருக்கின்றன. ஆறுகள், கடலோடு சங்கமம் ஆகும் முகத்துவாரங்கள், உப்பங்கழிகள், கடற்கரைகள், கழிமுகப் பகுதிகள், கழனிகள், மலைக் குன்றுகள், சோலைகள் எனப் பொதுவாக நிலவியல் அமைப்பில் எத்தனை வகையான கூறுகள் உண்டோ அவை அத்தனையும் ஈடில்லாத தனித் தன்மையோடு எழில் குலுங்கிச் சிரிக்கும் இன்பத் திருநாடே— தமிழ்நாடு.

தமிழ் நாடு — வேளாண்மைத் தொழிலைத் தலையாயதாகக் கொண்ட ஒரு மாநிலம். இந்த மண்ணிற்கு வளம் சேர்ப்பவை எண்ணற்ற ஆறுகள்.

இந்த ஆறுகள் அனைத்திலும் வற்றாத நதி காவிரி. பன்னெடுங்காலமாகவே இது தமிழகத்தின் உயிர் மூச்சாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஆறுகளின் குறுக்கே பல இடங்களில் அழகு தவழும் அணைக்கட்டுகள்; அவற்றை ஒட்டிக் கண்ணைக்கவரும் வண்ணப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணை, மதுரை மாவட்டத்திலுள்ள வைகை அணை, கோவை மாவட்டத்திலுள்ள பவானி அணை, பரம்பிக் குளம்—ஆழியாறு திட்ட அணை, சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணை முதலானவை உலாத் தலங்களாகப் பயன்படுகின்றன; அவை விடுமுறைகளைக் கழிக்க வருவோர்க்கு வேண்டிய வசதிகள் கொண்டவை.

மாநிலத்திற்கே அரிசி வழங்கும் அட்சயப் பாத்திரமாகவும், தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாகவும் விளங்கும் தஞ்சை எங்கும் பசுமை விரிந்து கண்ணுக்கினிய காட்சி தரும் காவிரி பாயும் வளங்கொழிக்கும் பகுதியாகும்.

தமிழ் நாட்டில் ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர்கள் நீளம் உள்ள கடற்கரையில் ஆங்காங்கே களிப்பூட்டும் வளாகங்கள் உள்ளன. சென்னையிலிருந்து ஒரு மணி நேரப் பயணத்தில் உள்ள மாமல்லபுரமும், கோவளமும் வளர்ச்சி பெற்ற கடற்கரை வளாகங்கள். மாமல்லபுரத்துக்கு இன்னொரு பெருஞ்சிறப்பும் உண்டு. பல்லவர் காலத்துத் தொன்மை மிக்க கலைச் சின்னங்களான குடவரைக் கோவில்கள், கடற்கரைக் கோவில், அர்ச்சுனன் தபசு எனும் சிற்பப் பாறை ஆகியவை மாமல்லபுரத்தை உலகப் புகழ்பெற்ற சுற்றுலா மையமாக மாற்றியுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கும், யாத்திரைத் தலங்களுக்கும் தமிழகம் பெயர் பெற்று விளங்குகிறது. சென்னையை அடுத்த காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருத்தணி மற்றும் திருவண்ணாமலை, சிதம்பரம், வடலூர், தஞ்சாவூர், திருவரங்கம், பழநி, மதுரை, இராமேசுவரம், நாகூர், வேளாங்கன்னி முதலானவை மிகச் சிறந்த புண்ணியத்தலங்களாகும்.

தமிழ் நாட்டில்—கண்ணைக் கவரும் வண்ணச் சோலைகள், நெஞ்சையள்ளும் நீர் வீழ்ச்சிகள், மகிழ்ச்சி ததும்பும் மலைவாழ் இடங்கள் யாவும் உண்டு. வகை வகையான விலங்கினங்கள், பறவையினங்கள் தாவர இனங்களும் உண்டு.

மேற்குமலைத் தொடர்களில் அமைந்துள்ள உதகமண்டலமும், கோடைக்கானலும், மனங்கவரும் மலை நகரங்கள். மரகதக் கம்பளம் விரித்தாற் போன்ற புல்வெளிகளும், பசுமரங்களும், மலர்க்குவியல்களும் நீர் நிலைகளும், முகில் மூட்டங்களும், குளுமையும், அமைதியும் பொழிந்து விழிகளுக்கு விருந்து படைக்கின்றன.

சென்னையில் உள்ள கிண்டி, மற்றும் முதுமலை, ஆனைமலை, முண்டந்துறை ஆகிய இடங்களில் காட்டு விலங்குகளின் உறைவிடங்களும் வேடந்தாங்கல், கரிக்கிளி, கோடிக்கரை ஆகிய இடங்களில் பறவைகள் புகலிடங்களும் உள்ளன.

மாநிலத்தின் எந்தக் கோடிக்குச் செல்வதற்கும் இனிமையான பயண வசதிகள் மிகச் சிறந்த முறையில் உள்ளன. சாலை வழிப் பயணமா, புகை வண்டிப் பயணமா, விமானப் பயணமா, எதுவாக இருந்தாலும் மிக எளிதாக மேற்கொள்ளலாம். மாநிலத் தலை நகரிலிருந்து 24 மணி நேரப் பயணத்திற்குமேல் எந்த ஓர் இடமும் இல்லை. தந்தி, தொலைபேசி போன்ற தகவல் தொடர்புகளுக்கும் எல்லா இடங்களிலுமே முதல் தரமான வசதிகள் உள்ளன.

தமிழ் நாட்டில்—உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், கடற்கரை வளாகங்கள், குடில்கள், மலை வாழ் இடங்கள், எண்ணற்றவை இருக்கின்றன.

உங்கள் நேரத்தையும் பணத்தையும் மிச்சப் படுத்தி, மாநிலம் முழுவதும் நீங்கள் சுகமாகச் சுற்றிப் பார்க்க தேவையான திட்டத்தைத் தீட்டி, உங்களுக்கு எல்லா வகைகளிலும் துணைபுரிய—வழிகாட்ட—எங்கள் **தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்** மகிழ்வோடு காத்திருக்கிறது.

இங்குள்ள பருவநிலை ஆண்டுமுழுவதும் இதமான வெப்பத்துடனே இருக்கும் என்றாலும் நவம்பர் முதல் பிப்ரவரி வரையுள்ள காலம் பயணத்திற்கு மிகச் சிறந்ததாகும். அப்போது 18°F– முதல் 30°F– வரை (60°C– முதல் 85°C– வரை) தான் வெப்ப அளவு இருக்கும்.

இம்மாநிலத்தில் எங்கே சென்றாலும், தமிழர்களுக்கே தனிச்சிறப்பான விருந்தோம்பலையும், பெருந்தன்மையையும் நட்புறவையுமே காண்பீர்கள்.

கண்ணுக்கும் கருத்துக்கும் குளிர்ச்சியான கவர்ச்சிமிகு சுற்றுலா இடங்கள் நிறைந்த அழகுத் தமிழகத்துக்கு வருக! பண்பாட்டுக்குப் பெயர் பெற்ற இம்மாநிலத்தில் மறக்கவொண்ணாத இன்பச் செலவு மேற்கொண்டு இன்பம் எல்லாமே பெறுக! என உங்களை **தமிழ் நாடு சுற்றுலாத் துறை இருகரம் கூப்பி வரவேற்கிறது.**

190464 190464 U8·21

காட்சிக்கினிய இடங்கள் நிறைந்தது தமிழகம்

சென்னை

வானளாவும் கட்டிடங்கள், பரந்து நீண்ட கடற்கரைகள், பசுமை கொழிக்கும் பூங்காக்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள் யாவும் தன்னகத்தே கொண்ட சென்னை நகர், தமிழகத்தின் தலை நகர்.

நெடுந்தொலைவுக்கு அப்பாலுள்ள நாடுகளிலிருந்தெல்லாம் ஆட்சித் தலைவர்கள், பேரறிஞர்கள், பெருங் கலைஞர்கள், வணிகர்கள், மாலுமிகள், மாமுனிவர்கள் எனப் பலதரப்பட்ட மக்கள் வருகை புரியும் நகர் சென்னை.

கைத்தறித் துணிகள், பட்டுவகைகள், ஏலம், கிராம்பு போன்ற மணப் பொருள்கள், தோல் பொருள்கள் முதலானவற்றைக் கப்பல் மூலம் ஏற்றுமதி செய்வதில் பல நூற்றாண்டுகளாகவே பெயர்பெற்று விளங்கும் மாநகரம் சென்னை.

அண்ணா சாலை

சென்னையின் அகலமான அரச பாட்டைகள் போன்ற நீண்ட நெடுஞ் சாலைகளில் அண்ணா சாலை மிக முக்கியமானது; அதன் இரு மருங்கிலும் வணிக நிறுவனங்கள், கடைகள் நிறைய உண்டு.

கைவினைப் பொருள்கள், கைத்தறி ஆடைகள் விற்பனை நிலையங்களில் குறிப்பிடத்தக்கவை 'வானவில்' வண்ணக்கைத்தறி (கோ ஆப்டெக்ஸ்) நிலையம். விக்டோரியா கைவினைப் பொருள்கள் நிலையம், பூம்புகார் கலைப் பொருள் விற்பனையகம், காஷ்மீர், கேரளா, கருநாடக மாநில அரசுகளின் கலைப் பொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் கிராம, கதர், கைத்தறி இல்லம் ஆகும். ஆயுள் காப்பகத்தின் விண்ணை அளாவும் பதினான்கு அடுக்கு மாடியுள்ள கட்டிடம் இங்கேதான் கம்பீரமாக நிற்கிறது. சென்னை நகரிலேயே திரை அரங்குகள் மிகுதியாக அமைந்துள்ள சாலையும் அண்ணா சாலை தான். சென்னை மாவட்ட மத்திய நூலகம் உள்ளதும் இங்கேதான். வில்லாய் வளைந்த அண்ணா மேம்பாலமும் இச்சாலையில்தான் அமைந்துள்ளது.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் *1653*-ல், வணிக மையமாக ஆங்கிலேயரின் கிழக்கு இந்தியக் கம்பெனியால் கட்டப்பட்டதே செயின்ட் ஜார்ஜ் கோட்டை. காலப் போக்கில், இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் வலிமைமிக்க மையமாக இது மாறிவிட்டது.

பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் மாறி மாறி இதனைக் கைப் பற்றியிருக்கிறார்கள். ஆங்கில அரசின் ஆளுனராகப் பின்னாளில் உயர்ந்த இராபர்ட் கிளைவ்—ஒரு காலத்தில் கிழக்கு இந்தியக் கம்பெனியில் சாதாரண எழுத்தராகத் தம் வாழ்வைத் தொடங்கியதும் இங்கே தான். இக்கோட்டைக்கு உள்ளேயே பழைய பாசறையும் அந்நாளைய அதிகாரிகளின் குடியிருப்பு இல்லங்களும் உள்ளன. அவற்றில் இரண்டு இல்லங்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. ஒன்று இராபர்ட் கிளைவ் வாழ்ந்தது; மற்றொன்று 1798-ல் தளபதி வெல்லெஸ்லி குடியேறியது.

இன்று இந்தக் கோட்டையில் தான்

அண்ணா சாலையிலுள்ள ஆயுள் காப்புக் கட்டிடம்

மாநிலச் சட்டப் பேரவையும் மேலவையும் தலைமைச் செயலகமும் இயங்கி வருகின்றன.

புனித மேரி மாதா கோவில்

இக்கோட்டைக்குள் உள்ள புனித மேரி மாதாகோவில் கி.பி. 1680-ல் கட்டப்பட்டிருக்கலாம் என நம்பப் படுகிறது. இது இந்தியாவில் முதன் முதலில் கட்டப்பெற்ற 'பிராட்டஸ்டண்ட்' கிறித்துவ ஆலயமும், ஆசியாவிலேயே மிகப் பழமையானதும் ஆகும். கிழக்கு இந்தியக் கம்பெனியில் எழுத்தராக (கிளர்க்) வாழ்வைத் தொடங்கி சென்னை மாநிலத்தின் ஆளுநராக உயர்நிலை எய்திய எலிகுயேல் என்பவர் இந்த மாதா கோவிலைக் கட்டுவதற்கு நன்கொடை வழங்கியவர்களில் மிகவும் புகழ் பெற்ற மனிதர் ஆவார்.

பின்னாளில் இவரது நன்கொடையினால் அமெரிக்க நாட்டில் யேல் பல்கலைக் கழகம் உருவெடுத்தது. பல்லாவரம் குன்றில் வெட்டப்பட்ட கருங்கல் பலகைகளே, இந்தப் புனித மேரி மாதாகோவிலில் பதிக்கப்பட்டுள்ளன; அவை அன்று முதல் இன்று வரை அப்படியே பயன்பட்டு வருகின்றன. பலி பீடத்துக்கு மேலே கடைசி இரவின் உணவு என்னும் ஒரு பெரிய வண்ண ஓவியம் உள்ளது. அது ரஃபேலின் மாணவர் ஒருவரால் தீட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப் படுகிறது. 1761-ல் ஆங்கிலேயர் பாண்டிச்சேரியைக் கைப்பற்றியபின், அங்கிருந்து சென்னைக்கு இந்த வண்ணப் படத்தை கொண்டு வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆலயத்தின் பதிவேடுகள் இரண்டு முக்கியமான திருமணங்களைப் பற்றித் தெரிவிக்கின்றன. அவை எலிகுயேலுக்கும்—கேதரின் ஹிம்னர்சுக்கும், இராபர்ட் கிளைவுக்கும் மார்கரெட் மஸ்கிலினுக்கும் நடைபெற்ற திருமணங்களாகும்.

கோட்டை அருங்காட்சியகம்

கோட்டைக்குள் இருக்கும் அருங்காட்சியகம் வரலாற்றுக் கருவூலமாகும். தென்னாட்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகளைப் பற்றிய வரலாறுகளை எடுத்துரைக்கும் கண்கவர் தடயங்கள் இங்கே பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ளது. படைக்கலன்கள், உடைவகைகள், நாணயங்கள் பதக்கங்கள், பீங்கான் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட பிரிவுகள் குறிப்பிடத்தக்கன.

மெரினா கடற்கரையிலுள்ள அண்ணா சதுக்கம்

உயர்நீதி மன்றம்

கோட்டைக்கும் துறைமுகத்துக்கும் இடையே எழுந்துள்ள உயர்நீதி மன்றக் கட்டிடங்கள் இந்து—அராபியக் கலையெழிலோடு 1861-ஆம் ஆண்டு அளவில் கட்டி முடிக்கப்பெற்றவை. இங்கேயுள்ள பழங்காலக் கலங்கரை விளக்கம் காண்பதற்கரியது.

அண்ணா சதுக்கம்

கோடிக்கணக்கான மக்களின் இதயக் கோவிலிலே குடியேறி தங்களது மூத்த அண்ணனாகவே எண்ணிய அவர்களால், 'அண்ணா' என்று பாசம் பொங்க அழைக்கப் பெற்றவர்

புனித தோமையார் தேவாலயம்—சாந்தோம்



பேரறிஞர் டாக்டர் அண்ணாத்துரை அவர்கள். ஒப்புவமை இல்லாத மக்கள் செல்வாக்குடன் ஒளிவீசிய அவர், தலை சிறந்த அரசியல் சிற்பி, முன்னாள் தமிழக முதல்வர். மெரினா கடற்கரையின் வடகோடியில் 'அண்ணா அடக்க மேடை' அமைந்துள்ளது. இதன் நுழை வாயில் யானைத் தந்தங்கள் போன்று கவர்ச்சியான முறையில் அமைக்கப் பட்டுள்ளது. அடக்க மேடையை ஒட்டியே நெடிதுயர்ந்து நிற்கும் நினைவுத்தூண் நம் நெஞ்சங் கவரத் தக்கது. அண்ணாவின் எண்ணக் கருவூலங்களைப் போன்றே அணையா விளக்கொன்று இங்கே எரிந்து கொண்டேயிருக்கிறது. சுற்றிலும் அழகு மிகு பூங்கா அமைதி தவழ அமைந்துள்ளது.

புனித தோமையார் பேராலயம்

புனித தோமையாரின் பெயரால் வழங்கப் பெறுவது சாந்தோம் பகுதி. இங்கே மெரினா கடற்கரையின் தென் கோடியில் சாந்தோம் கதீட்ரல் பாசிலிகா என்னும் கிறித்துவ தேவாலயம் அமைந்துள்ளது. 1896-ல் கட்டி முடிக்கப் பெற்றுப் புனிதம் செய்யப்பட்ட இக்கோவில் ஜெர்மானிய 'கோத்திக்' கட்டிடக் கலையெழிலைக் கொண்டதாகும். கிறித்துவ சமயப்பணி ஆற்ற இந்தியா வந்த யேசு தூதர் புனித தோமையார். அவருக்குக் காணிக்கையாக ஆக்கப்பட்ட தொடக்ககால கோவில்மனையில் இந்தத் தேவாலயம் கட்டப்பட்டிருப்பதாக நம்புகிறார்கள். இங்கேயே அவரது உடலும் அடக்கம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

செயின்ட் தாமஸ் மவுண்ட்

புனிதர் தோமையார் மலை, என்பது—அந்த யேசுதூதர் மறைந்த இடமாகும். குன்றின் உச்சியில் உள்ள மாதாகோவிலில் இரத்தம் கசியும் சிலுவை (Bleeding Cross) ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் புனித தோமையார் மறைவு நாளான டிசம்பர் 18-ஆம் நாள் இச்சிலுவையில் முன்பெல்லாம் இரத்தம் கசிந்தது என்று கூறப்படுகிறது.
மாதாவின் வண்ண ஓவியம் ஒன்றை இங்கே காணலாம். ஏசுபிரானின் 12 சீடர்களில் ஒருவரான புனிதர் லூக்காவினால் வரையப் பெற்று புனிதர் தோமையாரால் இந்தியாவுக்கு எடுத்து வரப்பட்டதாகும் அது.



தேசிய கலைக்கூடம்—சென்னை

காந்தி, இராஜாஜி, காமராசர் நினைவாலயங்கள்

கிண்டியில் ஆளுநரின் 'ராஜ பவனத்தை' அடுத்து மாபெரும் தலைவர்கள் மகாத்மா காந்தியடிகள், இராஜாஜி, காமராசர்—மூவருக்கும் நினைவகங்கள் எழுப்பப்பெற்று உள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் முன்னணித் தளபதிகள் இவர்கள்; தலைசிறந்த தியாகச் சுடர்கள்; நாட்டுக்கு நல்வழி காட்டிய சிற்பிகள். கோடிக்கணக்கான மக்களால் இந்தியாவின் தந்தை என வணங்கிப் போற்றப்படுபவர் மகாத்மா காந்தியடிகள். 'இராஜாஜி' என்று அன்போடு அழைக்கப்பெறும் சி. இராஜகோபாலாச்சாரி இந்திய முதல் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்தவர், தலைசிறந்த விடுதலை வீரர், தத்துவ ஞானி, அரசியல் மேதை, தமிழில் பல நூல்களை இயற்றியவர். 'பெருந்தலைவர்' என் அழைக்கப்பெறும் காமராசர் தேசிய விடுதலைப் போரில் தியாகத் தழும்புகள் பல ஏற்ற தீரர். எளிய குடும்பத்தில் பிறந்து தமிழக முதல்வராகவும் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகவும் தன் உழைப்பால் உயர்ந்த மக்கள் தலைவர் இவர்.

கபாலீசுவரர் கோவில்

மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவில் கம்பீரமானது; காட்சிக்கு இனியது. புராணக் கதையின்படி, சிவபெருமானின் வரம் வேண்டி முக்தி பெறுவதற்காகப் பார்வதிதேவி மயிலாக உருவெடுத்து அவரை வழிபட்டாராம். ஆலயத்தின் உள்ளே இந்தக் கதை சிற்பங்களாக வடிக்கப்பட்டு உள்ளது.

பார்த்தசாரதி கோவில்

திருவல்லிக்கேணியில் எழுந்துள்ள வைணவக் கோவில் மிகவும் அழகானது. எட்டாம் நூற்றாண்டில் பல்லவ மன்னர் ஒருவரால் கட்டப் பெற்றது. விசயநகர அரசர்களாலும் ஏனைய வேந்தர்களாலும் பல முறை புதுப்பிக்கப்பெற்றது. ஆலயத்தின் உட்புறச்சுவர்களில் சிந்தையைக் கவரும் சிற்ப வேலைப் பாடுகள் சில உள்ளன.

தேசியக் கலைக் கூடம்

எழும்பூர் பாந்தியன் சாலையில் எழில் கொஞ்சும் எடுப்பான பெரும் மாளிகையில் தேசியக் கலைக்கூடம் அமைந்துள்ளது. இக்கட்டிடம் இந்து—அராபியக் கட்டிடக்கலையெழிலுக்கு நேர்த்தியான ஒரு காட்சியாக நெஞ்சைக் கவர்கிறது. மாடர்ன் ஆர்ட் எனப்படும் நவீன ஓவியமும், பழைய வண்ண ஓவியங்களும் கொண்ட் கலைச் சோலையாக இது காட்சி தருகிறது. இராசபுதன, முகலாய, தென்னிந்திய வகைகளைச் சார்ந்த சில அருமையான வண்ண ஓவியங்களும் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.

வள்ளுவர் கோட்டம்—சென்னை

அரசு அருங்காட்சியகம்

தேசியக் கலைக்கூடத்தை ஒட்டியே
அரசு அருங்காட்சியகம் அமைக்கப்
பட்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு
முன்னால் நிறுவப்பெற்றது இது.
இங்குள்ள அருங்காட்சிப் பொருள்
களில் அமராவதியில் உள்ள புத்த
தூபிப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட
இரண்டாம் நூற்றாண்டுக் காலத்திய
அருமையான சிற்பப் பொருட்கள்
அடங்கிய பிரிவு குறிப்பிடத்தக்கது.

சிற்ப ஓவியக் கலைக் கல்லூரி

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள
சிற்ப ஓவியக்கலைக் கல்லூரி மிகவும்
புகழ் பெற்ற கல்லூரியாகும். ஒரு
நூற்றாண்டுக்கு மேலாக இயங்கிவரும்
இக்கல்லூரியில் கல்வி பயின்ற பலர்
அகில உலகப் புகழ்பெற்ற சிற்பிகளா
கவும் ஓவியர்களாகவும் ஒளி வீசுகின்
றனர். இக்கல்லூரியின் மிகப்புகழ்
வாய்ந்த முதல்வர்களில் சிற்பத்திலகம்
ராஜ் சவுத்திரியும் ஒருவர்.

வள்ளுவர் கோட்டம்

மனித குலச் சிந்தனைகளின் மலை
யுச்சியான தமிழ்மறையாம் திருக்
குறளை உலகுக்கு அளித்த செந்நாப்
புலவர் திருவள்ளுவரின் நினைவாக
எழுப்பப்பட்ட கலைச் சின்னமே
வள்ளுவர் கோட்டம். சென்னை
நுங்கம்பாக்கத்தில் எழில் கொஞ்ச
இது எழுந்துள்ளது. இதன் ஒரு
பிரிவு திருவள்ளுவர் சிலை அமைக்கப்
பட்டுள்ள தேர்ப்பகுதி, இன்னொன்று
பரந்த கலைக்கூடம். தேர்ப் பகுதி,
பாதி கருங்கல்லாலும் மீதி கான்கிரிட்
டாலும் கட்டப்பட்டது. திருவாரூர்
தேரின் வார்ப்படம் போல் இது
சிற்பச் சித்திரங்களுடன் அழகுற
வடிக்கப் பட்டுள்ளது. இதன் உயரம்
106 அடி (29 மீட்டர்). கலைஅரங்
கம் நீண்ட இரும்பு உத்தரங்களைக்
கொண்டு கட்டப்பட்டது. 220அடி
(64 மீட்டர்) நீளமும் 100 அடி
(30 மீட்டர்) அகலமும் கொண்ட
இந்தப் பரந்த அரங்கில் ஒரு தூண்
கூட இடையிலே இல்லை. ஒரே
நேரத்தில் 4000 பேர்கள் உட்கார
வசதியுள்ள இது ஆசியாக் கண்டத்
திலேயே மிகமிகப் பெரிய கலை
அரங்கமாகக் கருதப்படுகிறது.
தொன்றுதொட்ட கலைத்திறன்
வாய்ந்த சிற்பிகளின் ஆற்றலும் இக்
காலத்திய மிக நவீன பொறியியல்
நுட்பங்களும் கலந்து கனிந்த
கலைக்கோவிலே வள்ளுவர்கோட்டம்

தியசாபிகல் சொசைட்டி (பிரும்மஞானக் கழகம்)

விஞ்ஞானம், தத்துவம், சமயம்
ஆகியவற்றை ஒப்புநோக்கிக் கற்
பதற்கு ஊக்கமூட்ட உருவெடுத்ததே
தியசாபிகல் சொசைட்டி. டாக்டர்
அன்னி பெசன்ட், பிளேவாட்ஸ்கி
சீமாட்டி, காலனல் ஆல்காட் ஆகி
யோரால் நிறுவப்பெற்றது பிரும்ம
ஞானக் கழகம் இங்கேயுள்ள பழங்
கால ஓலைச் சுவடிகளைக் கொண்ட
நூலகம் கண்ணையும் கருத்தையும்
கவரக்கூடியது. இதன் தோட்டத்தில்
இந்தியாவிலேயே மிகப் பெரிய
பழைய ஆலமரம் ஒன்று இருக்கிறது.

கலாசேத்திரம்

சென்னையின் தென்பகுதியான
திருவான்மியூருக்கு அருகில் கிராமியச்
சூழலில் அமைந்துள்ளது கலாசேத்
திரம். தென்னிந்திய நாட்டிய இசைக்
கலைகளுக்கு மறுமலர்ச்சி அளிக்கும்
மாபெரும் பணியைக் கடந்த முப்பது
ஆண்டுகளாகப் புரிந்து வரும் உலகப்
புகழ்பெற்ற கலை நிறுவனம் இது.

குதிரைப்பந்தயத் திடல்

கிண்டி புகைவண்டி நிலையத்தை
அடுத்து குதிரைப் பந்தயத் திடல்
உள்ளது. நவம்பர் மாதம் முதல்
மார்ச்சு மாதம் வரை சென்னையில்
பந்தயங்கள் நடக்கின்றன. சீரான
அமைப்பு முறையுடன் இருநூறு
ஆண்டுகளாகக் குதிரைப் பந்தயம்
நடத்துவதில் தனிச் சிறப்புப் பெற்
றுத் திகழ்கிறது சென்னை.

மெரினா கடற்கரை

உலகிலேயே மிக நீண்ட கடற்கரை
களில் இது இரண்டாவது.
வண்ணப் பூங்காக்கள் அமைந்த
வெண்மணற் பரப்பில் அமர்ந்து
வீசிடும் தென்றலில் திளைத்து
சென்னை வாழ் மக்கள் ஆசையோடு
பொழுது போக்கி மகிழும்
அருமையான திறந்தவெளி மெரினா.

இதன் பூந்தோட்டந் தழுவிய நெடுஞ்
சாலையின் நடைபாதை ஓரமாகவே
அடுத்தடுத்து ஆன்றோர்கள் சிலரின்
அழகிய சிலைகள் அணி செய்கின்றன.
தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும்
நிகரில்லாத பணியாற்றிய பேரறிஞர்
களைக் கொண்டாட எழுந்த நினைவுச்
சின்னங்கள் இச்சிலைகள்.

சோழமண்டலம்

மாமல்லபுரம் போகும் வழியில்
திருவான்மியூருக்கு தெற்கில் ''சோழ
மண்டலம்'' என்னும் ஓவியக்
கலைஞர்களின் சிற்றூர் உள்ளது.

எழில்மிகு மெரினா கடற்கரை



ஏகாம்பரேசுவரர் திருக்கோவில்—காஞ்சிபுரம்

அதன் உயிரோட்டமாக பல சிற்பி களும் ஓவியர்களும் இணைந்து செயலாற்றுகின்றனர்.

திருக்கழுக்குன்றம்

கழுகுகளுக்கு உணவு படைத்தல் இங்கே நாள் தோறும் நடக்கும் சடங் காகும். குன்றின் உச்சியில் ஒவ்வொரு மதியமும் கோவில் குருக்கள் அவை களுக்கு உணவு ஊட்டுகிறார். புராணக் கதையின்படி இக்கழுகுகள் இரு முனிவர்களின் மறுபிறவிகளாக ஒவ்வொரு நாளும் ஆயிரம் மைல் களுக்கு (1600 கிலோ மீட்டர் களுக்கு) மேல் வாரணாசியிலிருந்து (காசி) இராமேசுவரத்துக்குப் போகும் வழியில் இங்கு உணவருந்த வருவதாகக் கூறப்படுகிறது. மாமல்லபுரத்திற்கு மேற்கே 15 கிலோ மீட்டர் தூரத்தில் திருக்கழுக் குன்றம் அமைந்துள்ளது.

காஞ்சிபுரம்

இந்தியாவில் ஏழு புனித நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்று. ஆறாம் நூற் றாண்டு முதல் எட்டாம் நூற் றாண்டு வரை பல்லவ மன்னர் களின் புகழ்மிக்க தலை நகராக இது விளங்கியது. பன்னெடுங் காலமாக கல்விக்கும், கலாச்சாரத்திற்கும் தலை சிறந்த பீடமாகக் காஞ்சிபுரம் திகழ்ந்து வந்திருக்கிறது. இந்து மதத்தோடு சமண சமயமும் பவுத்த நெறியும் இங்கே செல்வாக்குப் பெற்று வளர்ந்திருக்கின்றன. ஆதிசங்கரர் காமகோடிபீடம் என்னும் சமய அமைப்பை இங்கே நிறுவியுள்ளார்.

காஞ்சிபுரத்தில், தனிச்சிறப்பு வாய்ந்த கட்டிடக்கலை யெழிலுக் குக் கட்டியம் கூறும் கம்பீரமான கோவில்கள் உள்ளன. வைகுந்தப் பெருமாள் கோவில், ஏகாம்பரேசுவரர் கோவில், வரதராஜர் கோவில், கைலாசநாதர் கோவில், காமாட்சி யம்மன் கோவில், சக்கீஸ்வரர் கோவில் முதலானவை தென்னிந்திய கோவில் சிற்பக் கலைவளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி மாணவர்க்கு அருமை யான வாய்ப்புகளை வழங்கக் கூடிய பாடப் பனுவல்களாகும். நேர்த்தி மிகு பட்டுப் புடவைகளுக்கு உலகப் புகழ்பெற்ற காஞ்சிபுரத்திலும் அதன் சுற்று வட்டத்திலும் ஆயிரக் கணக் கான நெசவாளர் குடும்பங்கள் தங்கள் தறிகளில் வண்ணக்கோல எழில் கொஞ்சும் பட்டுத் துணி நெய்து வாழ்கிறார்கள்.

வேலூர்

வடஆற்காடு மாவட்டத்தின் தலை நகர் வேலூர். பழமையான கோட்டை அரணும் அதிலுள்ள வேலைப்பாடுகள் நிறைந்த சிற்பங் கள் கொண்ட கோவிலும் குறிப் பிடத் தக்கன. புகழ்மிக்க கிறித்துவ மருத்துவமனைக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் பெயர்பெற்று விளங்கு வது வேலூர். டாக்டர். இடாஸ்கட்டர் என்பவரால் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தோற்றுவிக்கப்பெற்றவை அவை.

ஏலகிரி மலை

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலை கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் தனித்து நிற்கும் கவர்ச்சிமிக்க சுற்றுலாக் குன்று. உடல் நலத்துக்கு உகந்த பருவநிலை, பசுமை கொழிக்கும் இயற்கை யெழில், முருகன் கோவில் — இந்த இடத்தில் காணக் கூடிய காட்சிகள். இதன் உயரம் சுமார் 1000 மீட்டர்கள்.

திருவண்ணாமலை

புகழ்பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பின் வடிவமாக சிவன் இங்கே வழிபாடு செய்யப்படுகிறார். இரமண முனி வர் ஆசிரமம் இங்கே உள்ளது. இந் தியாவிலிருந்து மட்டுமின்றி உலகம் முழுவதிலிருந்தும் பக்தர்களையும், பார்வையாளர்களையும் இது ஈர்க் கிறது.

சாத்தனூர் அணை

திருவண்ணாமலைக்கு அருகிலேயே சாத்தனூர் அணை இருக்கிறது. இங்கே நெஞ்சையள்ளும் நீச்சல் குளமும் நேர்த்திமிகு பூங்காவும் உள்ளன; வார இறுதிநாட்களில் வண்ண ஒளிவிளக்குகளின் வெளிச்சம் விழிகளுக்கு விருந்தாகும்.

செஞ்சிக்கோட்டை

தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனத்துக்கு மேற்கே சுமார் 20 கிலோ மீட்டர்கள் தொலைவில்

திருவண்ணாமலை போகும் சாலையில் உள்ளது. வரலாற்றுப் பெருமையும் கலையெழிலும் படைத்த செஞ்சிக் கோட்டை நம் நெஞ்சைக் கவர்வதாகும்.

திருவக்கரை

தென்னாற்காடு மாவட்டத்தில் புதுச்சேரிக்குப்பக்கத்தில் உள்ள திருவக்கரை படிமக்கற்கள் (Fossil wood) நிறைந்த இடமாகும். இங்கிருந்து எடுக்கப்பட்ட படிமக்கற்கள் நாடு முழுவதிலுமுள்ள ஏராளமான பொருட்காட்சியகங்களில் காட்சிக்குரியவையாக வைக்கப்பட்டுள்ளன. அருகில் அழகிய சிற்பங்களைக் கொண்ட சோழர் காலத்து கோவில் ஒன்று உள்ளது.

சிதம்பரம்

பரதக்கலையின் முழு முதற்பொருளான நடராசர் ஆனந்தநடனமாடும் இடம் சிதம்பரம். சோழ மன்னன் குலோத்துங்கனால் பொன்னோடு வேயப்பட்ட இந்தக் கோவிலில் பரதக் கலையின் 108 வகைத் தோற்றங்களும் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. ஆனித் திருமஞ்சனம் இங்கே சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். குருகுலம் முறையில் தமிழகத்தில் முதன் முதலில் எழுந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தில்லைக்கருகில் உள்ளது.

பிச்சாவரம்

சிதம்பரத்திலிருந்து சில கல் தூரத்திலேயே பிச்சாவரம் இருக்கிறது. கிழக்குக் கடற்கரையில் மூவாயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு உப்பங்கழிகள் உள்ளடங்கி இருக்கும் இது—நூற்றுக் கணக்கான அடந்த காடுகளைக் கொண்ட தீவுகளின் கூட்டமாகும். படகுப் பயணத்துக்கும் மீன் பிடிப்புக்கும், நீர்சருக்கு விளையாட்டுக்கும் இங்குள்ள அமைதியான கடல்நீர் ஏற்ற இடமாகும்.

பூம்புகார்

சிலப்பதிகாரத்தின் பிறப்பிடமான பூம்புகார் வங்காள விரிகுடாக் கடலோரத்தில்—இன்று சின்னஞ்சிறு கிராமமாகச் சிறுத்துக்கிடந்தாலும் ஒருகாலத்தில் சோழப் பேரரசர்களின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது. கீழை நாடுகளோடும், கிரேக்கம், உரோமாபுரி ஆகிய மேலை நாடுகளோடும் அது வணிகத் தொடர்பு வைத்திருந்தது. ஐம் பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் பண்டைய பூம்புகார் சிறப்பைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இங்குப் புதிதாக எழுந்துள்ள கலைக்கூடம், ஒரு காலத்தில் பெருமையோடு திகழ்ந்த இத்துறைமுகப் பட்டினத்தின் வரலாற்றுச் சிறப்புகளை நினைவுறுத்தி சிலப்பதிகாரக் காட்சிகளை நம்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது.

கும்பகோணம்

தஞ்சாவூருக்கு வடகிழக்கே 36 கிலோ மீட்டர் தூரத்தில் காவிரிக் கரையில் உள்ளது கும்பகோணம். இங்கே நான்கு பெரிய கோவில்கள்

நடராசர் திருக்கோவில்—சிதம்பரம்

கலைக்கூடம்—பூம்புகார்

இருக்கின்றன. அவற்றில் ஒன்று பிரும்மாவை தொழுவதற்குரியது. வேறெங்கும் பிரும்மாவுக்கென்று இவ்வளவு பெரியகோவில் இல்லை; இங்குள்ள மகாமகக் குளம் பெயர் பெற்றது. மகம் என்னும் விண்மீன் கூடிய நாளில் இதில் மூழ்கி எழுந்தால் பாவங்கள் அனைத்தும் பறந்து போம் என்பது ஐதீகம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் ‘மகாமக’த்திரு விழாவின் போது அந்தக்குளத்தில் நீராட இலட்சக் கணக்கில் மக்கள் திரளுகிறார்கள். கடைசியாக 1980 மார்ச்சுமுதல் நாள் மகாமக விழா நடைபெற்றது.

தஞ்சாவூர்

மாபெரும் சோழப்பேரரசின் மாட்சிமை மிக்க ஆட்சித் தலைநகராக ஒருகாலத்தில் செல்வாக்குப் பெற்று ஒளி வீசியது தஞ்சை நகர். நாற்புறமும் அகழிகள் சூழ்ந்த பெரிய அரண்மனைக் கோட்டையினுள் பிரகதீசுவரர் கோவில் உள்ளது. சிற்பக்கலையின் செழுமை மிகுந்த இப்பெரியகோவில் இராஜராஜ சோழனால் கட்டப்பெற்றது. மொத்தம் 66 மீட்டர்கள் உயரமுள்ள மிகப் பெரிய கோபுரம் கொண்ட இந்த ஆலயத்தின் மூலக்கருவறையின் மேலேயுள்ள விமானம் எடுப்பான ஒரு சிறப்பு அம்சம். இது அந்நாளைய பொறியியல் கட்டிடக்கலையின் நுட்பமான அற்புதமாகும். கோவில் வாசலைக் கடந்து சென்றால் உள்ளே நந்தியைக் காணலாம். நாட்டில் ஒரே கல்லில் வடிக்கப்பெற்ற மிகப்பெரிய சிற்பங்களில் இந்நந்தியும் ஒன்று. தஞ்சையில் சரபோஜி மன்னரால் உருவான சரசுவதி மகால் புகழ் மிக்க பழங்கால நூலகம். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பனை ஓலைச் சுவடிகளும் தற்கால நூல்களும் இருக்கின்றன. அவற்றில் சில எங்குமே காணக்கிடைக்காத அருமையானவை. இங்குள்ள கலைக்கூடம் வெண்கலச் சிலைகளுக்கும் கருங்கல் சிற்பங்களுக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சியம் என்னும் பெருமையோடு இசை, நடனம், மிக நேர்த்தியான கைவினைப் பொருள்கள். பஞ்சலோகச் சிலைகள், வெண்கல தாமிர கலைப் பொருள்கள், தஞ்சாவூர்த் தட்டுகள்

பிரகதீசுவரர் திருக்கோவில்—தஞ்சாவூர்

பசுமையான வயல்வெளி

நெட்டி வேலைகள் முதலானவற்றுக் குப் பெயர் பெற்றது.

தஞ்சாவூருக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவையாற்றில் ஆண்டுதோறும் சனவரித் திங்களில் நடைபெறும் தியாக பிரம்ம ஆரா தனை விழா சிறப்பானதாகும்.

வேளாங்கன்னி

இங்குள்ள புகழ்பெற்ற கத்தோலிக்க தேவாலயம் ''ஆரோக்கிய மாதா'' வுக்காக கட்டப்பட்டது. இக் கோவிலுக்கு நாடுமுழுவதிலிருந்து எல்லா மதத்தினரும் வருகிறார்கள்.

நாகூர்

புகழ்பெற்ற இசுலாமிய யாத்தி ரைத் தலம் இது. ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரி விழா திரளான மக்களை ஈர்க்கிறது. இந்த புண்ணியத் தலத்துக்கு எல்லா சமயத்தவரும் ஏராளமாக வருகிறார்கள்.

திருச்சிராப்பள்ளி

காவிரிக் கரையில் அமைந்த பழமையான நகரம் திருச்சி. இதன் வரலாற்றில் அற்புதமான அழிக்கமுடியாத அத்தியாயங்களைத் தீட்டியவர்கள் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள். கர்நாடகச் சண்டைகளில் ஓர் இறுதி நிலை ஏற்படுவதில் தலையாய பங்கு கொண்டது இங்குள்ளபுகழ் வாய்ந்த மலைக்கோட்டை. செயற்கை வைரங்கள், புகையிலை, கண்ணாடி வளையல்கள், கைத்தறித் துணிகள், மரத்திலும் களிமண் ணிலும் உருவான விளையாட்டுப் பொருள்கள் ஆகியவற்றுக்கு திருச்சி பெயர் பெற்றது. இங்கு வாழும் உள்ளூர் பொற்கொல்லர்கள், நுட்பமான தங்கம்—வெள்ளி நகைத் தொழிலில் தலைசிறந்தவர்கள்.

மலைக்கோட்டை

எண்பத்து மூன்று மீட்டர் உயர முள்ள மலைக்கோட்டையின் உச்சிக் குச் செல்ல 434 படிகளை மலை யிலேயே செதுக்கியிருக்கிறார்கள். வழியில் தாயுமானவர்சாமி கோவில் இருக்கிறது. நூற்றுக்கால் மண்டப மும் உள்ளது. மலைக்கோட்டையின் உச்சியில் பிள்ளையார் கோவில் இருக்கிறது. இங்குள்ள வேறு இரண்டு குகைக் கோவில்களில், ஆறாவது ஏழாவது நூற்றாண்டுச் சிற்பங்கள் நிரம்ப உள்ளன.

திருவரங்கம்

காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகளின் நடுவே காட்சிக்கு இனிய தீவாகத் திகழ்கிறது திருவரங்கம். 13–14 நூற்றாண்டு அளவில் கட்டப்பட்ட் இங்குள்ள அரங்கநாதர் கோவில் மிகவும் புகழ்பெற்றது. இங்கே ஆண்டு தோறும் (டிசம்பர் கடைசி வாரம் முதல் சனவரி இரண்டாம் வாரம் முடிய) 21 நாட்களுக்கு வைகுந்த ஏகாதசி திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

திருவானைக்காவல்

ஜம்பு என்பது புனிதமானநாவல் மரத்தின் பெயர். அதன் அடியில் சிவலிங்கம் தண்ணீரில் மூழ்கியிருக் கிறது. அதனால் திருவானைக் காவலுக்கு ஜம்புகேசுவரம் என்றும் பெயர். ஒரு காலத்தில் இங்குள்ள சிவலிங்கத்தை யானை ஒன்று வழிப்பட்டதாகப் புராணக் கதையும் உண்டு.

கல்லணை

காவிரியின் குறுக்கேசோழ மாமன்னன் கரிகால் பெருவளத்தானால் இது எழுப்பப்பட் டுள்ளது. அந்நாளைய பொறியியல் கலை வளத்துக்கு இது சான்றாகும்.

நார்த்தாமலை

புதுக்கோட்டையை அடுத்த நார்த்தா மலை கிராமத்தில் விஜயாலய சோழீசுவரமும், கற்கோவில் ஒன்றும் காணத் தக்கவை. ஏழாம் நூற் றாண்டில் முத்தரையர் தலைவனான செம்பூதியன் இளங்கோதரையன் என்பவனால் இக்கற்கோவில் எழுப்பப் பட்டுள்ளது. சோழர்கால சின்னங் கள் யாவற்றிற்கும் முற்பட்டதாகக் கூறப்படுகிறது.

சித்தன்னவாசல்

இங்குள்ள குன்றைச் சார்ந்த இடங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட இடுகாடுகள்

மலைக்கோட்டை—திருச்சிராப்பள்ளி



நிறைந்தது. இங்குள்ள குகைக் கோவிலில் பிராமி எழுத்துக்களின் கல்வெட்டுகள் உள்ளன. வண்ண ஓவியங்களும் குகைச் சுவர்களில் காணப்படுகின்றன. வடபுலத்திலிருந்து ஓடி வந்த சமணர்கள் இந்த மலைத் தளங்களில் மறைந்து வாழ்ந்திருக்கிறார்கள்.

கொடும்பாளூர்

இவ்வூரில் சிவன் திருமால் பிரும்மா ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் மூவர் கோவில் எனப்படும் மூன்று கோவில்கள் இருந்தன. இவை பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பெற்றவை. இவற்றில் ஒரு கோவில் அழிவுற்றது.

விராலிமலை

திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ள விராலிமலை, முருகன் கோவிலுக்குப் பெயர் பெற்றதாகும். பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டப்பெற்றது. இங்கே மயில்களை நிறையக் காணலாம்.

ஆவுடையார் கோவில்

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள ஆத்மநாதசாமி ஆலயத்தில் அற்புதமான சிற்பக் கலையெழிலைக் காணலாம். கோவில் மேற்கூரையின் ஓரங்களில், இறைவானம் போல் கல்லில் செதுக்கப்பட்டுள்ள கொடுங்கைகள் வியக்கத்தக்க சிற்ப நுட்பங்களின் சீரிய வெளிப்பாடாகும்.

சங்கத் தமிழ் வளர்த்த மாமதுரை

இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே கீழைநாடுகளின் ஏதன்ஸ் என கிரேக்கத் தலை நகரோடு ஒப்பிடத் தக்க புகழ்கொண்ட பெருநகர் மதுரை. மிடுக்காக எழுந்துநிற்கும் மீனாட்சி கோவிலுக்குப் பெயர்பெற்ற மாநகர் இது. தலை சிறந்த தமிழ்க் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரக் கதைத் தலைவி கண்ணகி பாண்டிய மன்னனின் அரசவையில் தன் கணவன் கோவலனுக்காக நீதி வேண்டி வாதமுழக்கம் புரிந்த மாநகரம் இது.

கீர்த்தி மிக்க குலசேகரப் பாண்டியன் மீனாட்சி கோவிலுக்கும் மாநகர் அமைப்புக்கும் அடித்தளம் அமைத்தான் என கதையொன்று வழங்குகிறது. பன்னெடுங்காலமாகவே தமிழ்மொழி, கலை, சிற்பம், இலக்கியம் அனைத்தும் மதுரையில் தழைத்துச் செழித்து வந்திருக்கின்றன. வைகை நதிக்கரையில்—மதுரை அழகுற அமைந்துள்ளது.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில்

மதுரையின் மையத்தில் கம்பீரமாக அமைந்துள்ள இந்த கோவில் 263 மீட்டர் நீளமும் 247 மீட்டர் அகலமும் உள்ளது. இதன் நான்கு புறங்களிலும் உள்ள நான்கு உயர்ந்த கோபுரங்களிலும் வண்ணச் சித்திரச் சிற்பங்கள் கண்ணைப் பறிப்பனவாகும். இது ஓர் இரட்டைக் கோவில்; ஒன்று தென்புறத்தில் உள்ள மீனாட்சி அம்மன் கோவில்; இன்னொன்று சுந்தரேசுவரர் கோவில். இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் கோவில் அருங்காட்சியகம் ஒன்று உள்ளது.

மாரியம்மன் தெப்பக்குளம்

மதுரை நகரின் கீழ்க்கோடியில், இத்தெப்பக்குளம் அமைந்துள்ளது. இதில் ஆண்டுதோறும் தை மாதத்தில் முழு நிலவு நாளில் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது.

கூடல் அழகர் கோவில்

மதுரை மாநகரின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ளது. இங்கு ஒன்றின்மேல் ஒன்றாக—உட்கார்ந்த நிலையிலும், நிற்கும் நிலையிலும், ஒய்வாகச் சாய்ந்த நிலையிலும் பொருந்தியுள்ள திருமாலின் தோற்றங்கள் கோவிலின் தனிச் சிறப்பாகும்.

மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கோவில்—மதுரை

காந்தி பொருட்காட்சியகம்

இராணி மங்கம்மாளின் பழைய அரண்மனை, காந்தி அருங்காட்சியகமாக மறுவடிவம் பெற்றுள்ளது.

திருமலை நாயக்கர் அரண்மனை

புகழ் பெற்ற திருமலை நாயக்க மன்னரால் 1636ல் இந்தோ-அராபிய பாணியில் எழுப்பப் பெற்றுள்ள அரண்மனை இது. இங்கு ஒலி ஒளிக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம்

சுப்பிரமணிய சுவாமிக்கும் தெய்வயானைக்கும் இங்குத் திருமணம் நிகழ்ந்ததாக புராணக் கதையொன்று வழங்கி வருகிறது. கோவிலின் கருவறை, மலையைக் குடைந்து உருவாக்கப்பட்டது.

வைகை அணை

மதுரையிலிருந்து அறுபத்தேழு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அணைக்கட்டுப் பகுதியில் வகைவகையான வண்ணமலர்களும் பசுஞ்செடிகளும் நிறைந்த எழில் கொஞ்சும் பூங்கா உள்ளது.

திருச்செந்தூர்

கடலோரத்தில் அமைந்துள்ள புகழ் மிக்க இங்குள்ள முருகனின் புண்ணியத் தலம் அறுபடை வீடுகளில் ஒன்று.

கோயம்புத்தூர்

'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப் பெறும் கோயம்புத்தூரும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் கணக்கிலடங்கா நெசவாலைகளுக்கும், வேளாண்மை மற்றும் நெசவுத் தொழில்களுக்குரிய ஆராய்ச்சிகளுக்கும் கேந்திரப் பகுதிகளாகும். பொறியியல் கருவிகள், நெசவாலைக் கருவிகள் உற்பத்திக்கும் இது முன்னணியில் நிற்கிறது. அருகில் பேரூரில் உள்ள சிவன்கோவிலும், மருதமலையில் உள்ள முருகன் கோவிலும் கண்டுகளிக்கத்தக்கவை. பவானி அணைக்கட்டு பார்க்கத் தக்க ஓர் அழகிய சுற்றுலா இடம்.



திருமலை நாயக்கர் அரண்மனை—மதுரை



செந்திலாண்டவர் திருக்கோவில்—திருச்செந்தூர்

காட்டு வளம் காண வாரீர்

தமிழ் நாட்டில் எண்ணற்ற வெப்ப மண்டலக் குறுங்காடுகளும் பெரும் புதர்களும் உள்ளன. அவற்றில் வகைவகையான தாவர இனங்களையும், விலங்கினங்களையும் காணலாம். அமைதியும் பசுமையும் தவழும் காவிய எழில் கொஞ்சும் இந்தக் காட்டுப் பகுதிகளைத் தற்கால நாகரிக முன்னேற்றங்கள் வந்து தாக்காமல் இல்லை. என்றாலும் மாநிலத்தின் தாவர—விலங்கின வகைகளைப் பேணிக்காக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியினால் விலங்குகள் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மான்கள் பூங்கா, கிண்டி

புதர்கள் மண்டிய பசுமை கொஞ்சும் பூங்கா இது. சென்னை நகர எல்லைக்குள் தெற்கு வெப்ப மண்டலப் பகுதிக்குள் அமைந்துள்ள இதில் முப்பதுக்கும் மேற்பட்ட மர வகைகள் உள்ளன. விரைந்து அழிந்து வரும் இந்தியக் கருப்பு நிறக்கலை மான் இனத்தைச் சார்ந்த கணக்கற்ற மான்களுக்கு இங்கே ''காப்பு வெளி'' அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளை மான்கள், வேறு விதவிதமான மான்கள், குரங்குகள் முதலான விலங்கினங்களையும் இந்தப் பூங்காவில் காணலாம்.

பாம்புப் பண்ணை, கிண்டி

வித விதமான பாம்புகளையெல்லாம் இந்தப் பண்ணையில் பார்க்கலாம். அரவங்களின் அரசனான நாகப்பாம்பு விரியன் பாம்பு, மண்ணுளிப்பாம்பு, தண்ணீர்ப் பாம்பு என்று இந்தியா எந்தெந்தப் பாம்புகளுக்கெல்லாம் பெயர் பெற்றதோ அத்தனைவகைப் பாம்பும் இங்குள்ள இயற்கையான சூழ்நிலையில் இயல்பாக நெளிகின்றன. பாம்பின் நச்சுப் பல்லிலிருந்து விஷத்தை எடுப்பது பார்க்கத் தக்க காட்சியாகும். இப்பாம்புப் பண்ணையும் மான்கள் பூங்காவின் ஒருபகுதியில் உள்ளது.

மான்கள் பூங்கா—கிண்டி, சென்னை

பறவைகள் புகலிடம்—வேடந்தாங்கல்

முதலைப் பண்ணை

சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் மாமல்லபுரம் செல்லும் சாலையில் கோவளத்தை அடுத்து இந்த முதலைப்பண்ணையைக் காணலாம். மாநில அரசின் துணையோடும், உலகக் காட்டுவிலங்கு நிதி உதவியோடும் இது நிறுவப்பட்டுள்ளது. அழிந்து கொண்டிருக்கும் ஓர் ஊர்வன இனமான முதலையை நூற்றுக்கணக்கில் இயற்கைச் சூழலில் ஒரே இடத்தில் காண்பது அருமையான காட்சியாகும்.

வேடந்தாங்கல்

இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நீர்ப் பறவைப் புகலிடங்களில் வேடந்தாங்கலும் ஒன்று. இது சென்னைக்குத் தெற்கே 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்குள்ள ஏரியில் நெடியகால்களைக் கொண்ட நாரைகளின் கூட்டத்தை காண்பது தென்னிந்தியாவில் வேறு எங்குமே இல்லாத வியக்கத்தக்க காட்சியாகும். அக்டோபர் முதல் மார்ச்சு வரையிலான ஆறு மாதங்களில் பருவ நிலைக்கேற்ப எண்ணற்ற நீர்க்கோழிகள் அங்கே நீந்தித் திளைக்கின்றன. ஆண்டுதோறும் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பறவைகள் வரை இங்கே வந்து கூடுகட்டிக்குஞ்சு பொரிக்கின்றன. வெள்ளைக்கொக்குகள், மீன் கொத்திகள், வாத்துகள், சாம்பல் நாரைகள் என்று நீர்நிலைப் பறவைகளில் எத்தனை வகைகள் உண்டோ அத்தனை வகைகளையும் இங்கே காணலாம்.

U8:211
N80

கோடிக்கரை

தஞ்சாவூர் மாவட்டத்தின் தென்கிழக்கே வங்கக் கடல் பாக்—சலசந்தியாக வளையும் முனையில் கோடிக்கரைக்காடு உள்ளது. சென்னையிலிருந்து புகைவண்டியில் ஓர் இரவுப் பயணத்திலேயே அங்கே சென்று விடலாம். குதிரைகள், கருப்புக் கலைமான்கள், புள்ளி மான்கள், காட்டுப் பன்றிகள், நீர்க் கோழிகள், குறிப்பாக நீர் நாரைகள் முதலானவை நிறைந்த காடு இது. வேனில் காலத்திலும் மழைக்காலத்திலும் இங்குள்ள பழமரங்களிலும் செடிகளிலும் கனிகள் பழுத்துக் குலுங்கும்; குயில்கள், வௌவால்கள், குருவிகள் கூட்டத்தைக் காந்தம்போல் கவர்ந்து இழுக்கும்.

190464

முதுமலை

தமிழகத்திலேயே மிகப் பெரிய வன விலங்குப் புகலிடங்களில் ஒன்றான முதுமலைக்காடு நீலகிரி மலையில் உள்ளது. உதகமண்டலத்திலிருந்து மைசூர் செல்லும் வழியில் 60 கிலோ மீட்டர் தூரத்தில் இது இருக்கிறது. இங்கே ஒரே சமயத்தில் நானூறுக்கும் மேற்பட்ட புள்ளிமான்கள் கூட்டமும், ஏறத்தாழ 20-30 இந்தியக் காட்டெருமைகள் கூட்டமாகசெல்லுவதும் காண்பதற்கரிய காட்சியாகும்.

அமைதி தவழும் சித்திரை—வைகாசி இரவு வேளைகளில்—அந்தக் காட்டுப் பகுதி முழுவதுமே இலட்சக்கணக்கான மின்மினிப் பூச்சிகள் தகதக வென்று மின்னி ஒளிவெள்ளத்தைப் பாயவிடும். விந்தையான ஒரு வேறுபட்ட உலகில்—ஒளி மலர்களுக்கிடையே திளைக்கின்ற களிப்பு நமக்கு வரும். சிறகடித்துப் பறக்கும் எண்ணற்ற வண்ணத்துப் பூச்சிகளும் நம் கண்ணைப் பறிக்கும்.

காட்டு நாய்கள், கரடிகள், முரட்டுப் பன்றிகள், முதலான காட்டு விலங்குகளுக்கும் இங்கே பஞ்சம் இல்லை. புலிகள், சிறுத்தைகள், குள்ளநரிகள், கழுதைப் புலிகள், புனுகுப் பூனைகள் முதலானவற்றுக்கும் இது வசதியான உறைவிடம். சாம்பர் என்னும் மான் வகைகள், நான்கு கொம்புகள் உடைய கருப்பு மான்கள், மருண்டோடும் புள்ளி மான்கள், மிகப்பெரிய அணில்கள், பறக்கும் அணில்கள், குலைக்கும் மான்கள், 'நீலகிரி ஐபெக்ஸ்' எனப்படும் மலை ஆடுகள் தலைமுடி அடர்ந்த குரங்குகள் இப்படி விந்தையான விலங்குக்கூட்டத்தையும் இங்கே நாம் காணலாம்.

ஆனைமலை

கோவை மாவட்டத்தில் உள்ள ஆனைமலைக்காடு வகைவகையான தாவரச் செடி, கொடி, மரங்களுக்குப் பெயர் பெற்ற இடம். காட்டு எருமைகள், யானைகள், புலிகள், சிறுத்தைகள், கரடிகள், காட்டுப் பன்றிகள், மான்கள், காட்டு நாய்கள், முள்ளம் பன்றிகள், கருமுயல்கள், பறக்கும் அணில்கள், குள்ளநரிகள், புனுகுப் பூனைகள் முதலான கணக்கில் அடங்காத விலங்கினங்களையெல்லாம் இங்கே காணலாம்.

முதுமலைக்காட்டில் யானை

ஓய்விற்குகந்த குறிஞ்சி நகரங்கள்

உதகமண்டலம்

இயற்கை எழிலின் இன்பமெல்லாம் ஊட்டுவதாலோ என்னவோ 'ஊட்டி' என்று சிறப்பாக அழைக்கப்படும் உதகமண்டலம் மலைத் தலங்கள் அத்தனைக்கும் பேரரசியாக விளங்குகிறது. இந்தியா விடுதலைப் பெறும் வரை, சென்னை மாநிலத்தின் கோடைக்காலத் தலைநகராக இது விளங்கியது. எனவே, மற்ற மலைத் தலங்களோடு ஒப்பிடும் பொழுது—இங்கே நகர்ப்புற நாகரிக மணம் மிகுதியாகவே கமழும். இங்குள்ள 2,633 மீட்டர்கள் உயரம் கொண்ட 'தொட்டபெட்டா' மலையேறிகளுக்கு மகிழ்ச்சிக் கிளர்ச்சியூட்டும் அருமையான அழகுப் பெட்டகம். எழில் மலர்கள் கொஞ்சும் 'தாவரத் தோட்டங்கள்', படகுச் சவாரிக்கேற்ற உல்லாச ஏரி, வேளாண்மை வளர்ச்சித்திட்டம், பசுமை கொழிக்கும் தேயிலைத் தோட்டங்கள்—இவையெல்லாம்—இந்தியாவில் என்றுமே பசுமை எழில் குன்றாத மலைத் தலங்களில் ஒன்றாக உதகமண்டலத்தை ஒளி வீசச் செய்கின்றன.

கெய்ர்ன்குன்று, அவலான்சி, முக்கூர்த்தி குன்று, பைக்காரா அணை, முதுமலைக்காடு, முதலானவை ஊட்டியைச் சுற்றியுள்ள உற்சாக மூட்டும் சுற்றுலா இடங்களாகும்.

உதகமண்டலத்தில்—ஏப்ரல் முதல் ஜூன் மாதம்வரை குதிரைப் பந்தயம் நடக்கிறது. இந்நகரை அடுத்து இன்னும் இரண்டு சிறிய மலைத் தலங்கள் உள்ளன. ஒன்று: குன்னூர். இன்னொன்று கோத்தகிரி. சிம்ஸ் பூங்கா, லேம்ஸ் பாறை, கேனிங் சீமாட்டிமேடை, டால்பின்ஸ்

தாவர இயல் பூங்கா—உதகமண்டலம்

மூக்கு, ராலையய்யா அணை, லாஸ் அருவி—இவையெல்லாம் குன்னூரின் அழகுக் கவர்ச்சிக்கு மெருகு சேர்ப்பவை. கோத்தகிரியில் கொடநாடு காட்சி முனை, செயின்ட் கேதரின் அருவி, அரங்கசாமி கல்தூண் மற்றும் கற்பாறை ஆகியவை காணத் தகுந்த இடங்கள். பொதுவாக, நீலகிரி மலைத் தொடர் காபி, தேயிலை, உருளைக் கிழங்கு தோட்டங்களுக்குப் பெயர் பெற்றதாகும். இங்கே தோதர்கள், கோதர்கள், குரும்பர்கள், படகர்கள், பனியாக்கள் ஆகிய பழங்குடி மக்கள் தொன்மைச் சிறப்புள்ள குடும்பங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

கோடைக்கானல்

மயக்கும் அழகு கொஞ்சும், இந்த மலைத்தலம், கடல் மட்டத்திலிருந்து 2,133 மீட்டர் உயரத்தில் உள்ளது. பிணியகற்றும் பெரு மருந்தாக பருவ நிலையும் பொருந்தியுள்ள (கோடையில் உச்ச வெப்பம்: 19.8°C குறைந்த வெப்பம் 11.3°C) இந்த மிடுக்கான மலை நகரில் பகற்பொழுதில் அதிக நேரம் கதிரவனின் ஒளிக்கதிர்கள் பொன்முலாம் பூசுகின்றன. மழைக்காலத்திலும் கூட ஐரோப்பியப் பயணிகள் தாங்கக் கூடிய குளிரிலேயே இது அமைந்துள்ளது. படகு விளையாட்டுப் பந்தயக்காரர்கள் சிந்தை மகிழும் வண்ணம், அணி அணியாகப் படகுகள் பாயும் அழகான ஏரியும் நட்சத்திர வடிவில் காட்சி தருகிறது.
பிரியன்ட் பூங்கா, பாறைத் தூண்கள், பெருமாள்குன்று, வெள்ளி நீர் வீழ்ச்சி, கரடிச் சோலை அருவி போன்றவையும், செண்பகனூர் புனித இருதயக் கல்லூரியில் உள்ள தாவர மற்றும் விலங்குப் பொருட்காட்சியும் கோடைக்கானலை நோக்கி நம் உள்ளத்தைக் கொள்ளையிட்டுச் செல்வனவாகும். இருவேறு செடிகளை ஒட்ட வைத்து மலரும் வண்ணப்பூக்கள், தேயிலை, காப்பித் தோட்டங்கள், 'பிளம்' பழங்கள், இவற்றுடன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் குறிஞ்சி மலர்கள் — இவையெல்லாம் சேர்ந்து கோடைக்கானலை இயற்கை அன்னையின் எழில் கூடமாகவே மாற்றி விட்டிருக்கின்றன. இங்கே குறிஞ்சி ஆண்டவர் கோயிலை ஒட்டி ஒன்றும், கோக்கர் நடை பாதையை ஒட்டி இன்னொன்றுமாக இரண்டு தொலை நோக்காடிகள் உள்ளன. அவற்றின் வழியாக முறையே பழநி கோவில், வைகை அணை இவற்றின் பரந்த வெளிக் காட்சிகளைப் பார்த்து மகிழலாம்.

ஏர்க்காடு

அமைதி தவழும் ஒய்வுக்குகந்த உல்லாச மலைத்தலம் ஏர்க்காடு. சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைத் தொடரில் இது அமைந்துள்ளது. சீமாட்டி மேடை கிள்ளியூர் அருவி, கரடிக் குகை, காவிரி பார்வைமுனை, பகோடா முனை, அண்ணா பூங்கா, பரந்த ஏரி, கரும்பச்சைக் காப்பித் தோட்டங்கள், மயக்கும் மலர்க் கூட்டங்கள், இனிக்கும் பழக்குலைகள்—இவை யாவும் ஏர்க்காட்டின் தனிச்சிறப்பான எழிற்கோலங்கள்.



ஏர்க்காடு ஏரியில் உல்லாசப் படகுகள்

வெள்ளியருவி—கோடைக்கானல்

மனங்கவர் கடற்கரைகள்-கடலோர ஓய்விடங்கள்

கோவளம்

மாமல்லபுரம் செல்லும் வழியில் ஓய்வுக்கு உகந்த ஊர் இது. அழகிய கடற்கரை ஓட்டல் ஒன்று இங்கே உருவெடுத்துள்ளது. பழமையான கத்தோலிக்க மாதாகோவில், ஒரு இசுலாமியப் பள்ளிவாசல் இவையெல்லாம் கோவளத்தைக் காணத் தகுந்த கடற்கரை ஊராக ஆக்கியுள்ளன.

மாமல்லபுரம்

தொன்மைச் சிறப்புமிக்க இந்தக் கடற்கரைப் பட்டினம் சென்னைக்குத் தெற்கே 60கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கி.பி. 600 முதல் 750 வரை தழைத்துச் செழித்த பல்லவர் காலத்து உளிகள் எவ்வாறெல்லாம் கற்களுக்கு உயிரூட்டி சிரிக்கும் சிற்பங்களைச் செதுக்கியுள்ளன என்பதை இங்குள்ள பாறைக் கோவில்கள் பறைசாற்றுகின்றன. மாமல்லபுரம் இன்று கடற்கரை ஓய்விடமாகவும் பெயர் பெற்று விளங்குகிறது. இங்கே பொன் மணற்பரப்பில் பொழுதைக் கழிக்க ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் சுற்றுலாப் பயணிகள் உற்சாகத்துடன் வருகின்றனர். எனினும் மிகுதியான, நடமாட்டத்தால் இந்த நீண்ட கடற்கரை அழகு நிலைகுலையவில்லை. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரைக் குடில்களும், ஏனைய விடுதிகளும் இங்கே தங்க வருவோர்க்குத் தேவையான வசதிகளை அளிக்கின்றன.

குடவரைக்கோவில்கள்

மாமல்லபுரத்தில் உள்ள ஒன்பது குடவரைக் கோவில்களில் கிருஷ்ண மண்டபம் காட்சி யெழிலுக்குப் பெயர் பெற்றது. மகிஷாசுரமர்த்தினிக் குகையின் ஒருபுறத்தில் மகாவிஷ்ணு கம்பீரமான கோலத்துடன் (அனந்த சயனமாகப்) பள்ளிகொண்டிருப்பதைப் பார்க்கலாம்; மறுபுறத்தில் எருதுத் தலையுள்ள அசுரர்களோடு காளிதேவி போராடுவதைக் காணலாம்.

கடற்கரைக் கோவில்

கடல், புயல், வெயில், காலச் சுழல் இவற்றின் தாக்குதல்களுக்கெல்லாம் தப்பித் தலைநிமிர்ந்து நிற்கிறது இந்தத் தொன்மையான கற்கோயில்.



கடற்கரை கோவில்—மாமல்லபுரம்

அர்ச்சுனன் தபசு சிற்பப் பாறை

உலகிலேயே மிக நீளமாக மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட கற்பாறைக் கலைப்பெட்டகம் இது. திமிங்கலத்தின் முதுகுவடிவில் அமைந்த பாறையில் செதுக்கப்பட்டுள்ள இந்தச் சிற்பங்கள், இடையிலே பிளவு கொண்டதாகக் கடலை நோக்கி நிற்கிறது. இதன் இரு புறங்களிலும் தெய்வங்கள், குட்டி தேவதைகள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், அன்றாட வாழ்க்கைப் பொருள்கள், தெய்வீகப் பொருள்கள் எல்லாம் வடிக்கப்பட்டுள்ளன.



அர்ச்சுனன் தபசு—பாறைச் சிற்பங்கள்—மாமல்லபுரம்



ஐந்து இரதங்கள்—மாமல்லபுரம்

ஐந்து ரதங்கள்

மாமல்லபுரத்தில் குகைக்கோவில்களுக்குத் தெற்கே இந்த ஐந்து இரதங்கள் அமைந்துள்ளன. இவை ஐந்தும் ஒரே பாறையில் செதுக்கப்பட்ட சிறப்புக் கொண்டவை. இவை பஞ்ச பாண்டவர் இரதங்கள் என வழங்கப்படுகின்றன. இவற்றில் நான்கு இரதங்களுக்குப் பாண்டவ மன்னர்கள் பெயர்களும் ஒரு இரதத்துக்கு அவர்களின் மனைவியான திரெளபதையின் பெயரும் சூட்டப்பட்டுள்ளன.

இராமேசுவரம்

இந்தியாவின் மிகப் புனிதமான மிகப் பெரிய யாத்திரைத் தலங்களில் இராமேசுவரமும் ஒன்று; இது இராமாயண இதிகாசக் கதையை ஒட்டி எழுந்த கோவிலைக் கொண்டது. இக்கோவிலில் வேறெங்கும் காண முடியாத வியப்புக்குரிய நீளமான உள் மண்டபப் பிரகாரம் உள்ளது. இந்து சமய பக்தர்கள் எந்தநாளும்

கோவில் சுற்றுப்பிரகாரம்—இராமேசுவரம்

கணக்கற்ற எண்ணிக்கையில் இங்கே வந்த வண்ணம் இருக்கிறார்கள். ஆலயத்தின் கிழக்கேயுள்ள 'அக்கினித் தீர்த்தம்' எனும் நீலக்கடலில் நீரராடினால்தான் பக்தர்களின் யாத்திரை முழுமை பெற்றதாகும் என்று நம்பப்படுகிறது. இராமேசுவரம் தீவு (34 சதுர மைல் கள்) 54.4 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவைக் கொண்டது; திருமாலின் சங்கு போன்ற வடிவமுள்ளது. இத்தீவு இருப்புப் பாதை மூலம் இந்தியப் பெருநிலத்தோடு இணைக்கப்படுகிறது.

மண்டபம்தான் பெருநிலத்தில் மிகவும் அண்மையிலுள்ள ஊர்; அங்கிருந்து இராமேசுவரத்துக்குக் கடலின் குறுக்கே இயங்கும் இருப்புப் பாலம் கட்டப்பட்டுள்ளது. இதற்குப் பாம்பன்பாலம் என்று பெயர். கடல்தாவர ஆராய்ச்சி நிலையமும், இந்திய—நார்வே மீன்வளர்ப்புத் திட்ட நிலையமும் மண்டபத்தில் இயங்குகின்றன. இவற்றால் இப் பகுதியில் மீன்பிடிப்புத் தொழில் வளர்ச்சி பெற்று வருகிறது.

இராமேசுவரம் தீவைச் சுற்றிலும் உள்ள கடல் நீரில் ஏராளமான மீன்கள் உள்ளதால் தென்னிந்தியாவின் மிகப் பெரிய மீன் உணவு மையங்களில் இதுவும் ஒன்றாக விளங்குகிறது. உலகிலேயே மிக அழகிய பவளப் பாறைகள் இதனைச் சுற்றிலும் காணப்படுகின்றன. சுற்றிலும் உள்ள கடல், அதனைச் சார்ந்த மணல்மேடுகள், இதமான சூரிய வெப்பம் ஆகியவை இத் தீவினை கவினுறு பகுதியாக திகழச் செய்திருக்கிறது.

கோவிலின் வடக்கே இந்தத் தீவிலேயே மிக உயரமான கந்தமாதன பர்வதம் என்னும் இடம் உள்ளது. இங்கே இரண்டு அடுக்குகள் கொண்ட மண்டபம் இருக்கிறது; அதில் உள்ள இராமபிரானின் பாதச் சுவடுகள் வழிப்படப்படுகின்றன். கோவிலின் தெற்கே தனுஷ்கோடிக்கு அருகில் கோதண்டராமசாமிகோவில் உள்ளது. அதில் இராமர், சீதை, இலக்குவன் அனுமன், விபீடணன் ஆகிய சிலைகள் உள்ளன.

குறுசடைத் தீவு

இராமநாதபுரம் வட்டத்தில் இராமேசுவரம் பகுதியில் உள்ள பதினாறு தீவுகளில் குறுசடைத் தீவும் ஒன்று. சுற்றிலும் பவளப் பாறைகள் சூழ்ந்துள்ளன. இந்தப் பகுதியில் கடற்பாசி, நட்சத்திர மீன்கள், நண்டுகள், வாளைகள், கடற்பஞ்சு, கடற்பசு முதலானவை எண்ணற்ற வகைகளில் உள்ளன. இந்தக் குறுசடைத் தீவைச் சுற்றிலும் 'டால்பின்' கடல் மீன்கள் குதித்து விளையாடுவது காண்பதற்கினிய காட்சி யாகும். பவளப்பாறைகள், முத்துச்சிப்பிகள், அருமையான சில கடற்செடிகள் ஆகியவை திரள் திரளாகச் செழித்துள்ள இனிய காட்சி- 'தாவரவல்லுநர்களின் சொர்க்கம்' என்னும் பட்டத்தை குறுசடைத் தீவுக்குக் கொடுத்துள்ளது.

கன்னியாகுமரி

இந்தியாவின் தென்கோடி முனையில் கன்னியாகுமரி இருக்கிறது. முக்கடல் முத்தமிட்டுத் தாலாட்டும் கன்னியாகுமரிக்குள்ள மாபெரும் மாட்சி அங்கு நாம் காணும் கதிரவன் கடலில் மறையும் காட்சி யாகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே முழு நிலவுநாளில் சூரியனின் மறைவும் நிலவின் உதயமும் ஒரே நேரத்தில் நிகழும் அற்புதமான காட்சியைக் காணக்கூடிய ஒரே இடம் கன்னியா குமரிதான். பனை ஓலைகளால் செய்யப்படும் பொருள்களுக்கும் சங்குமாலைகளுக்கும் அது பெயர் பெற்றது. மிகச் சிறந்த மீன்பிடிப்புத் துறைமுகமாகவும் அது விளங்குகிறது. அங்கிருந்து கட்டுமரங்களையும், படகுகளையும் தள்ளிக் கொண்டு மீனவர்கள் கடலினுள்ளே அணி அணியாய்ச் செல்லும் காட்சியழகே தனி!

கன்னியாகுமரி அம்மன்

கன்னித் தெய்வமான கன்னியா குமரிக்கு இங்கே அழகிய ஆலயம் ஒன்று உள்ளது. இந்தியாவுக்கே விழிப்பு மிக்க காவல் தெய்வமாகக் கருதப்படுகிறாள் குமரி அன்னை. புராணக்கதைப்படி சிவபெருமானின் கைத்தலம் பற்றி மனைவி ஆவதற்காகப் பார்வதி தேவி, கன்னியா தேவியாக அவதாரம் எடுத்து இங்கே தவம் இருந்ததாகக் கூறப் படுகிறது.

காந்தி நினைவு மண்டபம்

'இந்தியாவின் தந்தை' காந்தியடிகளின் அஸ்தி கடலில் கரைக்கப் படுவதற்கு முன்னால் எங்கே பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்ததோ அங்கே இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

விவேகாநந்தர் நினைவுப் பாறை

கன்னியாகுமரிக் கோவிலுக்குத் தென் கிழக்காக கடலில் இரு பாறைகள் உள்ளன. அவற்றில் ஒரு குன்றின் மீது அமர்ந்து, இந்து சமயத்தின் சங்க நாதமாக முழங்கி வந்த விவேகாநந்தர், சில நாட்கள் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்தார். 1970-ல் அவரது நினைவாக ஒரு மண்டபம் இங்கே எழுப்பப்பட்டுள்ளது. இந்தியாவின் கட்டிடக்கலையெழில்கள் அத்தனையின் முழுமையான கலவையாக இது ஒளிர்கிறது.

காந்தி நினைவு மண்டபம்—கன்னியாகுமரி

இசை பாடும் எழில் அருவிகள்

குற்றாலம்

பெல்ஜியம் நாட்டில் பிணியகற்றும் பேரருவி பாயுமிடம் 'ஸ்பா' (Spa). அதைப்போன்றே, தீராத நோயெல்லாம் தீர்க்கும் மூலிகைகளின் தாயகமாகக் குற்றால மலையருவியும் உடலுக்கு நலம் தருகிறது. வெள்ளியே உருகி விழுந்தாற்போல் விழும் நீர்வீழ்ச்சியில் நீராடுவதே பேரின்பம். ஜூன் முதல் செப்டம்பர்வரை இங்கே பக்குவமான பருவநிலை.

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி

பாய்ந்துவிழும் நீர்வீழ்ச்சியால் மேவி எழும் நீர்த்திவலைகள் புகைப் படலம் போன்ற எழில் தோற்றம் தருகின்றன. அதனாலேயே ஒகேனக்கல் என்ற பெயர் இதற்கு வந்துள்ளது. சேலத்திலிருந்து 65 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. விரைந்து கொட்டும் நீர்வீழ்ச்சி, அடர்ந்து செறிந்த மரக்காடுகள், பசுமை கொழிக்கும் இயற்கை எழில்கள் ஆகியவற்றின் அழகுச் சோலையான ஒகேனக்கல் விடுமுறையைக் கழிக்க ஏற்ற இடம்.

ஐந்தருவி—குற்றாலம்

அன்றாட வாழ்வில் சமயம்

இந்துமதம் பட்டொளி வீசி பரவியதற்குப் பல்வேறு கலைத் திறமை படைத்தவர்களும் பணி யாற்றி யிருக்கிறார்கள். வாக்கு வன்மை மிக்கவர்கள், சிற்பிகள், நடனக் கலைஞர்கள், நடிகர்கள், இசைவாணர்கள் ஆகியோர் கிரா மத்துக்குக் கிராமம், நகரத்துக்கு நகரம் சென்று கதா காலட்சேபங் களால்—சிற்பக் கலையால்—நாட் டியத்தால்—நாடகங்களால்—இசை மழையால்—இலக்கியங்கள், இதிகாசங்கள், அறநூல்கள், அறி வுறுத்திய சமய நெறிகளையெல் லாம் மக்களின் மனப்புலத்திலே மகிழ்ச்சி ததும்ப விதைத்திருக்கிறார் கள். இன்றைக்கும் அந்த இதயம் கவரும் தொண்டு இனிதேதொடர் கிறது. தென்னிந்தியா பண்டைக் காலந்தொட்டே ஏனைய சமய நெறிகளுக்கும் மனமுவந்த வர வேற்பை வழங்கிவந்துள்ளது.

இந்துமதமே தலையாய சமயம் என்றாலும், ஒருகாலத்தில் சமண பவுத்த சமயங்கள் தென்னாடெங் கும் பரவலான செல்வாக்குடன் செழித்திருந்தன. கிறித்துவ சமயத் தோற்றத் தொடக்கத்தில் யூத சமயத்தினரும் கொச்சி வழியாக தென்னாட்டுக்கு வந்து குடியேறியிருக் கிறார்கள். சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் முகமது நபியின் தொண்டர் கள் இங்கே வந்தார்கள்; கலாச்சார, சமுதாயப் பிணைப்புடன் கட்டுக் கோப்பான இசுலாமிய சமயத்தவ ராக இவர்கள் வளர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். அறநெறிப் பண்பு களுக்கு ஆக்கந்தரும் தென்னிந்தியா வில் கிறித்தவ தேவலாயங்களும் சீரோடு வேரோடி நன்னெறிகளைப் பரப்புகின்றன; கலாச்சார நற் பணிகளை ஆற்றி வருகின்றன. இன்றுள்ள நிலையில் தென்னிந்தி யாவின் தலையாய சமயங்களான இந்துசமயம், இசுலாமிய சமயம், கிறித்துவ சமயம் ஆகிய மூன்றும் கடந்த பல நூற்றாண்டுகளாகவே தமிழ்நாட்டின் ஊனோடும் உயிரோ டும் ஒன்றிக்கலந்து விட்டன.

தமிழ்நாட்டில்—அமைதியும், அறத் தூய்மையும் ஆட்சி புரியும் ஆசிரமங் கள் எண்ணற்றவை இருக்கின்றன. உண்மையான ஆன்மஞானத்தை, உள்ளொளித் தெளிவை ஊட்டுகின்ற பரம்பொருள் ஞானிகளின் உறைவிடங் கள் இவை.

மனச் சுமையை, உடற்பிணியைத் தணிக்கும் மருந்தாகக் கால வெள்ளத் தை யெல்லாம் கடந்து வந்து பயன் நல்கும் யோகாசனங்களுக்கும் தமிழகம் பெயர்பெற்றது.

தமிழ் இலக்கியம்

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'—பாரதியார்

உலகின் மிகத் தொன்மைவாய்ந்த மொழிகளில் தமிழ் தலைசிறந்தது. கிறித்து பிறப்பதற்குப் பல நூற் றாண்டுகளுக்கு முன்னரே தழைத்துச் செழித்த மொழி இது.

தமிழ் இலக்கிய வரலாற்றின் நான்கு பெரிய ஊழிக்காலங்களில் முதன்மை யானது சங்க காலம். எத்த னையோ இலக்கியச் செல்வங்கள் காலக் காட்டாற்றிலே கரைந் தழிந்து போனாலும்கூட எஞ்சியுள்ள இலக்கியக் கருவூலங்கள், சங்ககாலத் தமிழினத்தின் பண்பாடு, நாகரிகக் கண்ணோட்டத்தைக் கண்முன்னே நிறுத்தும் ஒளிப்படங்களாக ஒளி வீசுகின்றன. சங்க காலப் புலவர் பெருமக்கள் போர்க்களங்களை—புலியெனப் பாயும் வீரத்தை—பூரிப்புவழியும் காதலை—ஏங்கி யழும் பிரிவை—மனிதகுலமாட்சி யை—பார்புகழும் தங்கள் பாக்களிலே வடித்திருக்கிறார்கள்.

திருக்குறளைத் தீட்டிய திருவள்ளுவர் காலத்திலிருந்து தமிழ் வரலாற்றின் இரண்டாம் ஊழி தொடங்குகிறது. மண்குடிசை ஏழைகட்கும், மாளிகை வாழ் மன்னர்கட்கும் ஒருசேர நெறிபுகட்டி உய்விக்க வழிகாட்டும் ஒப்பற்ற கைவிளக்கு திருக்குறள். இதில் இல்லாத எப்பொருளும் இல்லை. இயற்றப்பெற்று இருபது நூற்றாண்டுகள் கடந்தும்கூட, சாதி, சமய, தட்ப—வெட்பக் காலச் சோதனைகளையெல்லாம் கடந்து நின்று எல்லா காலத்துக்கும் பொருந்துமாறு பொன்னொளி வீசும் திருக்குறளின் மாட்சியை என்னென்றுதான் புகழ்வது! இதைத் தவிர இன்னும் இரண்டு சங்ககாலக் காப்பியங்கள் தங்கத் தமிழ்ப் பொய்கையில் தன்னொளி சிந்தும் தாமரைப் பூக்கள்: ஒன்று, கற்பு நெறிக் கனலாய் ஒளிர்ந்த கண்ணகி யின் கண்ணீர்க் கதையாம் சிலப்பதி காரம்; இன்னொன்று; இக்கால அன்னை தெரேசாவைப் போல் அக்கால அறப் பணித் திலகம்—கருணை மழைபொழிந்த கன்னித் துறவி—மணிமேகலையின் மாண்பைப் பாடும் ''மணிமேகலை''. தமிழ் இலக்கிய மகுடத்திலே வண்ண ஒளியை வாரிவீசிடும் முப்பெரும் வைரமணிகளே இந்த மூன்று பெருங்காப்பியங்களும் என்று சுப்பிர மணிய பாரதியார் சொல்மாலை தொடுத்திருக்கிறார்.

ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டுவரை ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆண்டவன் அரு ளையும், ஆலயப் பெருமைகளையும் பாடிப் பரவிச் சமய இலக்கியங் களைக் குவித்தார்கள். சமய வழி பாட்டிலே மெய்யான ஞான விளக்கை ஏற்றும் அரும்பணியில் திருமூலர், பட்டினத்தார் போன்ற சித்தர்கள் தீந்தமிழ்ப் பாக்களை வடித்தார்கள்.

சிவபெருமான் திருவிளையாடல் களை உயிர்ப்புள்ள ஓவிய மாக்கிய சேக்கிழார்—இராமபிரானின் வாழ்க்கையை காவியக் கருவூலமாக்கிய கம்பர்—பாண்டவர் வரலாறாம் பாரதக் கதையைப் பைந்தமிழ்ச் சோலையின் ஒரு பழமாகத் தந்துள்ள' வில்லிபுத்தூரார்—இவர்கள் மூவரும் தமிழ் இலக்கிய வரலாற்றின் மூன்றாம் ஊழிக்காலத்தைச் சார்ந்தவர்கள். இருபதாம் நூற்றாண்டு தொடங்கு வதற்குச் சற்றுமுன்னர் நான்காக் ஊழிக்காலம் அரும்புவதாகக் கூற லாம். சமரச சன்மார்க்கத் தந்தை வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் புதியதொரு தமிழ்ப் புனலைத் திருவருட்பா வடிவில் தவழவிட்டார்.

அவரையடுத்து, தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரும், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனாரும், புதுமைத்தமிழுக்கு வளம் சேர்த்தனர். 'தமிழ் கடல் மறைமலையடிகள், தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாண சுந்தரனார், பேரறிஞர் சி. என். அண்ணாத்துரை, 'கல்கி' கிருஷ்ண மூர்த்தி, டாக்டர் மு. வரதராசனார் முதலானோரின் இலக்கியப் படைப்பு கள் இக்காலத் தமிழ் மறுமலர்ச்சிக்கு இனிய நறுமணம் சேர்த்துள்ளன.

முத்தமிழ்க் கலைகள்

இசையும், நடனமும் ஒவ்வொரு தமிழனின் இரத்தத்தோடும் கலந்தவை. நாடோடித் தெருக்கூத்துக் காரர்கள் பட்டி தொட்டியெங்கும் சென்று ஆடிப் பாடுவதைப் பார்க்கலாம். கழனிகளில் ஏர் உழுது—கால் நடைகளை மேய்த்து வாழும் ஏழை எளிய பாட்டாளி மக்கள் இன்புற்றுக் களிக்கும் வண்ணம் வீரர்கள் வரலாற்றைப் பாடிக்காட்டியும், தெய்வத் திருவிளையாடல்களை ஆடிக் காட்டியும், தெருக்கூத்துக்காரர்கள் இசை-நடனக் கலைகளை வளர்த்து வந்திருக்கிறார்கள். கழைக்கூத்தாடிகள், பாம்பாட்டிகள், மாந்திரீகர்கள், ஆருடக்காரர்கள், பெருமாள் மாட்டுக்காரர்கள், கரக ஆட்டக்காரர்கள், காவடி ஆட்டக்காரர்கள், பொய்க் கால் குதிரை ஆட்டக்காரர்கள்—ஆகியோர் நாட்டுப்புறப் பொழுதுபோக்குக்கலை வளர்ச்சியில் தங்களை முழுமையாக இணைத்துக் கொண்டவர்கள்.

வீணையில் எழும் கீதம்

பரதநாட்டியம்—இந்தியாவின் பழம் பெரும் நடனக்கலையாகும். அதன் தொன்மைச் சிறப்புக் குலையாமல் இன்றும் துலங்குகிறது; பரதநாட்டியத்தின் ஒவ்வொரு காலடித் துடிப்பும், கைவிரல் அசைவும் பொருள்செறிவோடு புரியவைக்கும் உணர்ச்சி வெளிப்பாடுகளாகும். வழிவழிவந்த கர்நாடக இசைப் பின்னணியுடன் நடனப் பெண்மணிகள் பரதநாட்டியக் கலை விருந்தைப் படைக்கிறார்கள்.

தமிழ் மண்ணில் இரண்டறக் கலந்து வளர்ந்த கலைச் செல்வங்களில் இசைக் கலையும் ஒன்று. பக்தி மிக்க இசைவாணர்கள் தென்னிந்திய இசைக்கலையாக கர்நாடக இசையையே வளர்த்து வந்திருக்கிறார்கள். தற்கால நாகரிகத் தாக்குதலுக்கு இரையாகிவிடா வண்ணம், தொன்றுதொட்ட அதன் தூய பண் வடிவத்தைக் கண்ணுங்கருத்துமாகத் தொடர்ந்து வாழையடி வாழையாக அவர்கள் காத்து வருகிறார்கள்.



பரத நாட்டியம்

கண்கவரும் வண்ண விழாக்கள்

கிராமியக்கலை—கரக ஆட்டம்

சிறப்புமிக்க தென்னிந்திய இசைக் கருவிகளில்—திருவிழாக்களிலும் திருமணங்களிலும் வாசிக்கப்படும் நாதசுவரம் மற்றும் மிருதங்கம், வயலின், வீணை, புல்லாங்குழல், கடம், கஞ்சிரா ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இந்த இசைக்கருவிகள் பல மேல்நாட்டுக் இசைவாணர்களையும் வியக்கத்தக்க வகையில் கவர்ந்துள்ளன. அவர்களில் சிலர் பேரார்வத்தோடு கர்நாடக இசையிலும், கருவிகள் வாசிப்பிலும் பயிற்சிபெற்று நன்றாகத் தேர்ச்சிபெற்றுள்ளனர்; தங்கள் இசைத் திறமையை வெளிப்படுத்திச் செல்வாக்கும் அடைந்து வருகின்றனர்.

கிராமியக்கலை—பொய்க்கால் குதிரை ஆட்டம்

ஆண்டுமுழுதும் இல்லங்களிலும் இதயங்களிலும் மகிழ்ச்சி துள்ள-இன்ப விழாக்கள் எடுத்துக்களிப்பதில் தமிழ்நாடு தலைசிறந்து விளங்குகிறது. இந்தத் திருவிழாக்களுக்கும் தெய்வ வழிபாட்டுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. சமயச் சான்றோர்களின் பிறந்த நாட்கள், உழவுத் தொழிலை போற்றும் நாள், கருவிகளைக் துலக்கிக் காக்கும் நாள், தெய்வங்களின் திரு விளையாடல்களை நினைவுறுத்தும் நாட்கள்—என்று ஏதேனும் ஒரு காரணத்தோடு திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

பொங்கல் விழா

தைத் திங்கள் முதல் நாள் தமிழர்களின் திருநாள்; உழைப்பின் வெற்றியைப் பொற்றும் உழவர்களின் பெருநாள். அன்று மஞ்சள் கொத்து கட்டிய, புதுப் பானையில் புத்தரிசி, பால், பருப்பு, நெய், ஏலம், அனைத்துடனே, இனிப்பும் சேர்த்து உவகை பொங்க பொங்கலிட்டு கரும்புடன் உழவுக்கு உயிர்க் கடவுளாம் சூரியனுக்குத் தங்கள் நன்றிக்காணிக்கையாகப் படைத்து மகிழ்வார்கள்.

இந்நாளே அறுவடைத் திருநாளாம் 'பெரும்பொங்கல் நாள்; மறுநாள் உழவுக்கு உறுதுணையாம் மாடுகளை மதிக்கும் 'மாட்டுப் பொங்கல்'. மூன்றாம் நாள் உற்றார் உறவினரை கண்டு களிக்கும் 'காணும் பொங்கல். உழவுத் தொழிலையும், தொழிலுக்குத் துணை நிற்கும் இயற்கை ஆற்றல்களையும், விலங்குகளையும் போற்றி, வணங்கி, நன்றி தெரிவிக்கும் இனிய விழாவே பொங்கல் திருவிழா.

விநாயக சதுர்த்தி

'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தின் உருவகமாக வணங்கப்படுவர் கணபதி. அவரைக்கொண்டாட நடைபெறும் விழாவே 'விநாயக சதுர்த்தி'. யானையின் முகவடிவம் கொண்ட இத்தெய்வத்திற்கு மாராட்டியத்திற்கு அடுத்த படியாகச் சிறப்பாக விழா நடப்பது தமிழ் நாட்டில்தான்.

நவராத்திரி

கொலு பொம்மைகளை வைத்துக் கொண்டாடும் விழா இது. ஒன்பது இரவுகள் தொடர்ந்து நடைபெறுவதால் இவ்விழாவுக்கு நவராத்திரி என்று பெயர். செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் வரும் நவராத்திரியின் போது, துர்க்கை இலட்சுமி, சரசுவதி ஆகியபெண் தெய்வங்கள் முக்கியமாக வழிபாடு செய்யப்படுகிறார்கள்.

தீபாவளி

இன்னல் தீர்ந்து இன்பம் பிறக்கும் நாள். ஐப்பசி மாத நன்னாளில் எண்ணெய் தேய்த்து நீராடி, புத்தாடை புனைந்து, விருந்துண்டு, உற்றார் உறவினர்களுடன் மகிழ்ந்திருக்கும் நாள். மத்தாப்புக்கள் மலர்ந்து சிரிக்க—பட்டாசுவெடிகள் செவிகளைப் பிளக்க—குழந்தைகளும், முதியவர்களும் சேர்ந்து கொண்டாடும் ஒளி விழா தீபாவளி.

சரசுவதி பூஜை

கல்விக்கும், கலைக்கும் கடவுளாகக் கருதப்படுகிறவர் சரசுவதி. அவருக்கு விழாக்கொண்டாடும் நாளே சரசுவதி பூஜை. வெள்ளைத்தாமரையில் வெள்ளைத் துகில் உடுத்து வீணை ஏந்தி வீற்றிருக்கும் கலைவாணிக்கு விழா எடுக்கும் இந்த நாள் தான் முன்னாளில்

நவராத்திரி விழா

இந்துக்கள் கல்விப் பயிற்சி தொடங்கும் நாளாக இருந்திருக் கிறது. இப்போது இந்த நிலை மாறி விட்டது. ஆனால் கைவினைஞர்கள், வியாபாரிகள், மாணவர்கள் யாவரும் தங்களது கருவிகளை, கருவூலங் களை, புத்தகங்களை வைத்து இந்நாளில் வணங்கும் பழக்கம் இருந்து வருகிறது.

ஏனைய விழாக்கள்

இந்தத் தலையாய விழாக்களைத் தவிர அந்தந்த ஊர்களில் உள்ள தெய்வங்களுக்கு ஆண்டுதோறும் நாள்கணக்கில் திருவிழாக்கள் சிறப் பாக நடைபெறுகின்றன. திருவரங் கத்தில் மார்கழி மாத ஏகாதசி நாளில் திருமால் கோவிலில் நடைபெறும் சொர்க்கவாசல் திறப்புவிழா பல்லாயிரக் கணக்கான வைணவபக்தர்களை ஈர்ப்பதாகும்.

மதுரையில் நடக்கும் சித்திரைத் திருவிழா, திருவாரூர்—காஞ்சிபுரம் தேர்த்திருவிழாக்கள்—மதுரையிலும் மயிலாப்பூரிலும் நடக்கும் தெப்பத் திருவிழாக்கள்—மயிலாப்பூர் அறு பத்துமூவர் விழா முதலானவை குறிப்பிடத்தக்கவையாகும்.

கிறித்துவர் விழாக்கள்

வேளாங்கன்னி மாதா கோவில் திரு விழா இலட்சக்கணக்கான மக்களை ஆண்டுதோறும் ஈர்க்கிறது. சென்னை, செயிண்ட் தாமஸ் மவுண்ட் தேவாலயத்தில் நடக்கும் விழாவும் குறிப்பிடத்தக்கது. இயேசு பிறந்தநாளை (டிசம்பர் 25) மிகுந்த பக்தி ஈடுபாட்டோடு புத்தாடை உடுத்தி உற்சாகமாகக் கிறித்துவர்கள் கொண்டாடுகிறார்கள்.

இசுலாமியர் விழாக்கள்

ரம்சான், பக்ரீத் போன்ற புனித நாட்களில் இசுலாமியர்கள் தொழுகை நடத்தும் அழகே தனியானது. சென்னை திருவல்லிக்கேணி மசூதி யில் ஆயிரக்கணக்கில் அவர்கள் திரண்டு வந்து தொழுவது கண்கொள்ளாக் காட்சியாகும். தஞ்சைமாவட்டம் நாகூரில் நடை பெறும் கந்தூரி மிகுந்த உற் சாகத்துடன் கொண்டாடப்படும் விழா. அதற்குப் பல்லாயிரக்கணக் கில் இசுலாமியர்கள் மட்டுமின்றி எல்லா மதத்தினரும் செல்கிறார்கள்.

தெப்பத் திருவிழா—மதுரை

தேர்த் திருவிழா

காண்போர் வியக்கும் கைவினைப் பொருள்கள்

கலைநுட்பம் வாய்ந்த கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகத் தனித் தன்மையுடனும் சிறப்பு அம்சங்களுடனும் புத்தம் புது வகைகளில் உருவாகும் தமிழ்நாட்டுக் கைவினைப் பொருள்கள் உலகம் முழுவதும் புகழ் பெற்றுத் திகழ்கின்றன. வழிவழியாக வந்த தேர்ச்சி மிக்க கலைஞர்கள்—கைவினைஞர்களின் ஆற்றலாலும் இயற்கை வளத்தாலும், இனிய தொழிலமைதிச் சூழலாலும், தனக்கேயுரிய தனிச்சிறப்புடன் தமிழ்நாடு, கலை—கைவினைப் பொருள்கள் உற்பத்தியில் தலை நிமிர்ந்து நிற்கிறது. அன்றாடத் தேவைப் பொருள்களான புடவையானாலும், பானையானாலும் அவை சாதாரணமாகப் பயன்படும் பொருள்கள் எனும் நிலையில் மட்டும் படைக்கப்படுவது இல்லை. தறியிலே நெய்யப்படும் புடவையும் சரி, சக்கரத்தில் வனையப்படும் மண்பானையும் சரி கலைமுத்திரைப் பதிந்த கவினழகுச் சின்னங்களாகவே உருவாகின்றன. நெடுங்காலமாகவே தமிழ் நாட்டில் கோவில்கள் சமய, சமுதாய அமைப்பின் மையமாக

அர்த்தநாரீசுவரர் உலோகச்சிலை



தஞ்சாவூர் அலங்காரத் தட்டு

விளங்கி வந்திருக்கின்றன. அதன் எழில் மிக்க அமைப்புக்கு, ஈடுபாடு மிக்க தொழில் நுட்பக்கலைஞர்கள் நூற்றுக்கணக்கில் தேவைப்பட்டிருக்கிறார்கள். வீட்டு மாடத்தில் ஏற்றப்படும் சாதாரணப் பித்தளை விளக்குகள், வகைவகையாக அமைந்த சரவிளக்குகள், திரைச்சீலையாகவும் தேர்த்தோரணங்களாகவும் பயன்படுத்தப்படும் சித்திரங்கள்பொறித்த வண்ணத் துணிகள், மெல்லிய நெட்டிமாலைகள், நேர்த்தி மிக்க உலோகச் சிலைகள்—ஒவ்வொன்றும் கலை எழில்மிக்க கைவினைப் பொருள்களாம்.

சிவன்—பார்வதி வெண்கல விக்கிரகங்கள், நடராசர் சிலை, திருமால் இலட்சுமி சிலைகள் ஆகியவை நுட்பம் செறிந்த-கைவினைத் தொழிலுக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட கலைஞர்களின் அருமையான அழகுப் படைப்புகளாகும். எழில் ததும்பும் விதம் விதமான விந்தை வடிவங்களை, பழங்காலச் சித்திரக் கலைகளை, புதுமையான அலங்கார வேலைப்பாடுகளைப் பயன்படுத்தி பித்தளை, தாமிரம், செப்பு ஆகிய உலோகங்களில் வடிக்கப்படும் தட்டுக்கள், கிண்ணங்கள், பூந்தொட்டிகள், போன்றவைகள் கைவினைக் கலைஞர்களின் அரிய திறமைக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். கலையழகு கொஞ்சும் இப்பொருள்கள், சுவாமிமலை, நாச்சியார்கோவில், கோட்டார் ஆகிய இடங்களில் உருவாகின்றன. மிக நேர்த்தியாகச் செதுக்கப்படும் மேசைகள், சிறுமேசைகள், ஏனைய மரப்பொருள்களுக்கு மதுரையும், விருதுநகரும் பெயர்பெற்று விளங்குகின்றன.



பிச்சாடனர் சிற்பம்

தஞ்சாவூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்கள் நேர்த்திமிக்க நெட்டிவேலைகளுக்குப் பெருமை பெற்றவை. இந்தியாவில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் கூடப் பல வீடுகளில் இந்த நுண்மைமிக்க அழகிய நெட்டிப் பொருள்கள் பெருமிதந்தரும் அலங்காரத்துடன் காட்சி அளிக்கின்றன. இவ்வாறே தோலால் செய்யப்படும் பொருள்களும், களிமண்ணால் ஆகும் மட்கலங்களும் கலையெழில் ததும்ப கண்களைக் கவர்கின்றன.

பனைஓலைகள், கோரைப் புற்கள் போன்றவற்றால் செய்யப்படும் விளக்குக்குல்லாய்கள், பூக்கூடைகள், கைப்பைகள் முதலான பயன்படு பின்னல் பொருள்களை அழகுறப் படைப்பதிலும் தமிழ்நாட்டுக் கைவினைஞர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள். வண்ணச்சாயச் சித்திரங்கள் இடையிடையே மின்ன—கோரைப்புற்களின் மெல்லிய தண்டுகளால் பின்னப்படும் நேர்த்தியான பாய்கள் தரையில் படுப்பதற்கேற்ற பாய்களாக—மேசை விரிப்புகளாக—தொங்கும் திரைகளாகப் பயன்படுகின்றன.

காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை முதலான இடங்களில் காந்தம்போல் கவர்ந்திழுக்கும் எழில் வடிவங்களில் பட்டிலும் பஞ்சிலும் பாங்காக நெய்யப்படும் வண்ணப்புடவைகள் கண்ணைப் பறிப்பவையாகும்.

நடன விநாயகர் சிற்பம்—மதுரை

வளரும் தமிழகம்

பலநூற்றாண்டுகளாகவே தமிழர்கள் மாபெரும் கட்டிடக் கலைச் சிற்பிகளாக, பொறியியல் வல்லுநர்களாக புகழ்படைத்தவர்கள். மிக நுட்பமான பலவடிவங்களுடன் மிகப் பெரிய மாளிகை அமைப்புகளை அவர்கள் திட்டமிட்டுக் கட்டி வந்திருக்கிறார்கள். காலப்போக்கில், தங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு ஆலயங்களை எழுப்பினார்கள்; நல்வாழ்விற்கு அணைக்கட்டுகளைக் கட்டினார்கள். கால்வாய்களை வெட்டினார்கள்.

இன்று தமிழ் நாடு, நாடு தழுவிய மாபெரும் வளர்ச்சிப் பணிகளில் தலையாய ஒரு பங்கினை ஆற்றி வருகிறது.

வேளாண்மைத் துறையில் கையாளப்படும் முன்னேற்றமான முறைகள், நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைப் போக்கையே மாற்றி விட்டன. சாலைகளும் இருப்புப் பாதைகளும் நாடு முழுவதையும் நெருக்கமாகப் பின்னிப் பிணைத்துள்ளன. மின் உற்பத்தியிலும் அதனைப் பயன்படுத்துவதிலும், தமிழகம் மாபெரும் சாதனைகளைப் புரிந்து முன்னணியில் நிற்கிறது.

கடந்த முப்பது ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி தடங்கல்களையெல்லாம் தாண்டி, நாட்டு மக்களுக்குத் தேவைப்படும் தோல் பொருள்கள், மிதிவண்டிகள், ஆட்டோமொபைல் கருவிகள், மருத்துவக் கருவிகள், பொறியியல் பொருட்கள், ஆடைகள், கைத்தறித்துணி வகைகள், விளையாட்டுப் பொருள்கள், இசைக் கருவிகள், டிராக்டர்கள் போன்ற பெரிய வாகனங்கள் முதலான பல வகையான பொருள்களைப் பெருமளவில் உற்பத்தி செய்வதிலும் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது.

எனினும் தமிழன் அன்பும் அடக்கமும் கொண்டவனாக பண்பும் பழமையும் பாராட்டுபவனாக வாழ்ந்து வருகிறான். அவனது வாழ்க்கை மன நிறைவு கொண்டது; மகிழ்ச்சி நிரம்பியது. அவனது அன்பு கனிந்த தோழமை உணர்வு, பண்பு தவழும் விருந்தோம்பல் அயல்நாட்டு மனிதர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவனவாகும்.

தமிழ்நாடு—சுற்றுலாப் பயணிகளை இன்முகத்தோடு வரவேற்கிறது

வசதியுடன் தமிழகத்தைச் சுற்றிப் பார்க்க-

சொகுசுப் பேருந்தில் சிக்கனச் சுற்றுலா

எழில்மிகு சென்னையைக் கண்டு மகிழவும், தமிழகத்தின் சிறப்பிடங்களையும் தென்னிந்தியாவின் சுற்றுலாச் சிறப்புக்களையும் காணும் வகையிலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சொகுசுப் பேருந்துகளில் சுற்றுலாப் பயணங்கள் நடத்தி வருகிறது. பேருந்தில் இடங்களைப் பதிவு செய்ய தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 143, அண்ணா சாலை (தொ. பே. 88806)யில் உள்ள பயணச் சீட்டு விற்பனை நிலையத்தில் பதிவு செய்து கொள்ளலாம். அல்லது விரைவுப் பேருந்து நிலையம், உயர்நீதி மன்ற வளாகம், சென்னை (தொலைபேசி 25982) என்ற முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டும் சென்னையிலுள்ள முக்கிய ஒட்டல்கள், பிரயாண முகவர்கள் ஆகியோரிடமும் முன் பதிவு செய்து கொள்ளலாம். பிரயாணச் சீட்டு வாங்கும் வசதியும் இவ்விடங்களில் உண்டு. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணங்கள் :

1. சென்னை நகரச் சுற்றுலா : எல்லா நாட்களிலும் கட்டணம் ரூபாய் 20/-
2. சென்னை—காஞ்சிபுரம்—திருக்கழுக் குன்றம்—மாமல்லபுரம் சென்று திரும்புதல்—எல்லா நாட்களிலும்—கட்டணம் ரூபாய் 35/-
3. ஏழு நாள் தமிழகச் சுற்றுலா: ஒவ்வொரு சனிக்கிழமையும் சென்னையிலிருந்து புறப்படுகிறது. சென்னை-திருச்சி-திருவரங்கம்-கோடைக்கானல் - மதுரை-கன்னியாகுமரி-சுசீந்திரம்-திருச்செந்தூர் ராமேசுவரம்-தஞ்சாவூர்-சென்னை, கட்டணம்.: இருவர் அறையில் தங்குவோருக்கு ரூபாய் 575/–தனி அறையில் தங்குவோர்க்கு ரூபாய் 625-
4. ஏழு நாள் தென்னகச் சுற்றுலா : ஒவ்வொரு சனிக்கிழமையும் சென்னையிலிருந்து புறப்படுகிறது. சென்னை-பெங்களூர்-சோமநாதபுரம்-திருவரங்கப்பட்டணம்-பிருந்தாவனம்-மைசூர்-முதுமலை காட்டுவிலங்குகள் புகலிடம்-உதகமண்டலம்-குன்னூர்-கோவை-கொச்சி-குருவாயூர்-பழனி-திருச்சி-பாண்டிச்சேரி-சென்னை. கட்டணம்: இருவர் தங்கும் அறையில் தங்குவதற்கு ரூபாய் 575/- தனி அறையில் தங்க ரூபாய் 625/- கட்டணங்கள் யாவும் தங்கும் வசதி. சொகுசுப் பேருந்தில பிரயாணம் மற்றும் சுற்றிப் பார்த்தல் ஆகியவை உள்ளிட்டது.
5. திருப்பதி சிக்கனச் சுற்றுலா: புதன், வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 6 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்டு, திருப்பதி-திருமலை-திருச்சானூர் சென்று இரவு 9 மணிக்கு சென்னை வந்தடையும். கட்டணம்: சிறப்பு தரிசனம் உள்பட ரூபாய் 95/-

குறிப்பு:- தவிர்க்க முடியாத காரணத்தால் கட்டணத்தில் மாறுதல் இருக்கலாம்.

ஒட்டல் தமிழ் நாடு

தமிழகத்தில் சுற்றுலாச் சிறப்புமிக்க முக்கிய இடங்களில் எல்லாம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஒட்டல் தமிழ் நாடு அமைந்துள்ளன. அழகுடனும், போதுமான வசதிகளுடனும், அனைத்து நிலை பயணிகளுக்கும் ஏற்ற வகையில் இவைகள் அமைந்துள்ளன. தமிழகத்தில் ஒட்டல தமிழ் நாடு. திருச்சிராப்பள்ளி (தொ. பே. 25383) தஞ்சாவூர் (தொ. பே. 57). சிதம்பரம் (தொ. பே. 323). மதுரை (தொ. பே. 27139 & 31453), கோடைக்கானல் (தொ. பே. 481), இராமேசுவரம் (தொ. பே. 77), திருச்செந்தூர் (தொ. பே. 68), கன்னியாகுமரி (தொ. பே 57 & 22), உதகமண்டலம் (தொ. பே. 2544). ஒகேனககல் (தொ. பே 47), ஏர்க்காடு (தொ. பே. 373), ஆகிய இடங்களில் உள்ளன. மாமல்லபுரத்தில் கடற்கரை வளாகக்குடில்கள் உள்ளன. (தொ. பே. 35 & 68) சாலை வழிப்பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற வகையில் 'மோட்டல்' (Motel) எனும் சாலையோரத் தங்கும் விடுதிகள் ராணிப்பேட்டையிலும் (தொ. பே. 812) உளுந்தூர்பேட்டையிலும் (தொ. பே. 88) அமைந்துள்ளன. எல்லா இடங்களிலும் அறைகளை முன்கூட்டியே பதிவு செய்ய குறிப்பிட்ட இடங்களின் மேலாளரிடமோ, அல்லது சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகத்திலோ தொடர்பு கொள்ளலாம்.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்கள்

சென்னை

காண வேண்டிய இடங்கள் :

மெரினா
செயிண்ட் ஜார்ஜ் கோட்டை
மான்கள் பூங்கா
பாம்புப் பண்ணை
அருங்காட்சியகம்
பெரியார் நினைவகம்
தேவாலயங்கள்
தேசியக் கலைக்கூடம்

அருகிலுள்ள இடங்கள் :

சோழ மண்டலம் (15-கி. மீ)
முதலைப் பண்ணை ([illegible]-கி. மீ)
வே[illegible]
புக[illegible] (85 கி. மீ)

ஏர் இந்தியா, சிங்கபூர் ஏர்லைன்ஸ், மலேசியன் ஏர்லைன் சிஸ்டம், ஏர் லங்கா மற்றும் இண்டியன் ஏர்லைன்ஸ் விமானங்கள் வந்து செல்லும் வசதிகளைக் கொண்டது சென்னை விமான நிலையம். சாலை வழியிலும், புகைவண்டிப் பாதையிலும் இந்திய நகரங்கள் அனைத்துடனும் இணைந்துள்ளது சென்னை. பெரிய துறைமுகமும் இங்குண்டு.

தங்கும் வசதி :

தங்குவதற்கேற்ற அனைத்து நிலை ஒட்டல்களும், நட்சத்திர ஒட்டல்களும் இங்கு அமைந்துள்ளன.

காஞ்சிபுரம்

(சென்னையிலிருந்து 71 கி. மீ)

காண வேண்டிய இடங்கள் :

கோவில்கள்
அண்ணா நினைவகம்
கைத்தறி பட்டாடை நிலையங்கள்

அருகிலுள்ள விமான நிலையம். சென்னை. சென்னையிலிருந்து புகைவண்டிப் பயணம், சாலைவழிப் பயணம் மூலம் காஞ்சி அடையலாம்.

தங்கும் வசதி :

இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அசோகா ஒட்டல், தனியார் விடுதிகள்.

திருவண்ணாமலை

(சென்னையிலிருந்து 180 கி. மீ)

காண வேண்டிய இடங்கள் :

கோவில்; இரமண முனிவரின் ஆசிரமம். அருகிலுள்ள விமான நிலையம் :- சென்னை. எல்லா இடங்களிலிருந்தும் சாலை வழித் தொடர்புடையது. திருவண்ணாமலை விழுப்புரம்-காட்பாடி. புகைவண்டிப் பாதையில் உள்ளது.

சிதம்பரம்

(சென்னையிலிருந்து 245 கி. மீ)

காண வேண்டிய இடங்கள் :

நடராசர் திருக்கோவில்; அண்ணாமலை பல்கலைக் கழகம். பிச்சாவரம் (8 கி. மீ) அருகிலுள்ள விமான நிலையம :- திருச்சி. சென்னை, திருச்சியிலிருந்து விரைவுப் பேருந்துகளும். புகைவண்டிகளும் இங்கு வருகின்றன.

தங்கும் வசதி :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒட்டல் தமிழ் நாடு இங்கு அமைந்துள்ளது.

பூம்புகார்

(சென்னையிலிருந்து 285 கி.மீ)

காண வேண்டிய இடங்கள் :

தொல் பொருள் ஆய்விடங்கள், கலைக்கூடம், பிறநினைவுச் சின்னங்கள். 160 கி.மீ. தொலைவில் திருச்சிராப்பள்ளி விமான நிலையம் அமைந்துள்ளது.

அருகிலுள்ள புகை வண்டி நிலையம் 30 கி.மீ. தொலைவில் மாயவரத்தில் உள்ளது. நல்ல சாலை வழித் தொடர்புடையது.

தங்கும் வசதி :

சுற்றுலாத் துறை நடத்தும் குடில்கள்.

கும்பகோணம்

(சென்னையிலிருந்து 280 கி. மீ.)

காண வேண்டிய இடங்கள் :

மகாமகக் குளம், கோவில்கள்,

அருகிலுள்ள இடங்கள் :

தாராசுரம், திருபுவனம், சுவாமிமலை
அருகிலுள்ள விமான நிலையம்—
திருச்சிராப்பள்ளி. சிதம்பரம், தஞ்சை திருச்சிராப்பள்ளி ஆகிய ஊர்களுடன் சாலை வழியே இணைந்துள்ளது, சென்னை தஞ்சை புகை வண்டிப் பாதையில் இவ்வூர் அமைந்துள்ளது.

தங்கும் வசதி :

தனியார் ஒட்டல்கள்.

தஞ்சாவூர்

(சென்னையிலிருந்து 316 கி.மீ.)

காண வேண்டிய இடங்கள் ;

பிரகதீசுவரர் கோவில், ம்ற்ற கோவில்கள், சரசுவதி மகால் நூல் நிலையம், கலைக்கூடம்

அருகிலுள்ள இடங்கள் :

வேளாங்கன்னி 90 கி.மீ. திருவையாறு,
திருவாரூர், நாகூர் 100 கி.மீ.
கோடிக்கரை, அருகிலுள்ள விமான நிலையம் :—60 கி.மீ. தொலைவில் திருச்சிராப்பள்ளியில் உள்ளது.
சென்னை—திருச்சிராப்பள்ளி புகை வண்டிப் பாதையில் தஞ்சை அமைந்துள்ளது. சென்னையிலிருந்தும்-முக்கிய இடங்களிலிருந்தும் விரைவுப் பேருந்து வசதி உண்டு

தங்கும் வசதி :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அசோகா ஓட்டல், தனியார் ஓட்டல்கள்.

திருச்சிராப்பள்ளி

(சென்னையிலிருந்து 320 கி.மீ.)

காண வேண்டிய இடங்கள் :

மலைக்கோட்டை. கோவில்மண்டபம், குடவரைக் கோவில், தேவாலயங்கள், மசூதிகள்.

அருகிலுள்ள இடங்கள் :

கல்லணை 19 கி. மீ.
திருவனைக்காவல் 5 கி. மீ.
திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) 6 கி. மீ.
நார்த்தாமலை 57 கி மீ.
சித்தன்னவாசல் 53 கி.மீ
விராலிமலை 30 கி.மீ.
கொடும்பாளுர் 50 கி மீ.
விமான நிலையமும் முக்கிய ரயில் சந்திப்பும் திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ளது இங்கிருந்து இதர இடங்களுக்கு விரைவுப் பேருந்து வசதி உண்டு.

தங்கும் வசதி :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு, இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அசோகா ஓட்டல், 2 மற்றும் 3 நட்சத்திர ஓட்டல்கள்.

மதுரை

(சென்னையிலிருந்து 460 கி.மீ.)

காண வேண்டிய இடங்கள் :

அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில், திருமலை நாயக்கர் மாளிகை மாரியம்மன் தெப்பக்குளம்
கூடலழகர் கோவில்
காந்தி அருங்காட்சியம்

அருகிலுள்ள இடங்கள் :

திருப்பரங்குன்றம் 8 கி. மீ.
பழனி கோவில் 122 கி. மீ.
வைகை அணை 69 கி. மீ.
கோடைக்கானல் 120 கி. மீ.
முக்கிய ரயில் சந்திப்பும், விமான நிலையமும் மதுரையில் அமைந்துள்ளது சென்னைக்கும், இதர முக்கிய இடங்களுக்கும் விரைவுப் பே[illegible]ந்து வசதி உண்டு.

தங்கும் வசதி :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு, இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அசோகா ஒட்டல், 2 மற்றும் 3 நட்சத்திர ஓட்டல்கள்.

திருச்செந்தூர்

(சென்னையிலிருந்து 637 கி.மீ.)

காண வேண்டிய இடங்கள் :

அருள்மிகு செந்திலாண்டவர் திருக்கோவில்.
அருகிலுள்ள விமான நிலையம் மதுரையில் உள்ளது.
சென்னை, மதுரை, திருநெல்வேலியுடன் புகை வண்டித் தொடர்புடையது.

தங்கும் வசதி :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு, ஆலய நிர்வாகம் நடத்தும் தங்கும் விடுதிகள்.

கோயம்புத்தூர்

(சென்னையிலிருந்து 489 கி.மீ.)

காண வேண்டிய இடங்கள் :

நூற்பு ஆலைகள், வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

அருகிலுள்ள இடங்கள் :

பவானிசாகர் அணை (71 கி மீ.)
மருதமலைக் கோவில், ஆனைமலை காட்டு விலங்குகள் புகலிடம் (80 கி.மீ.)
பேரூர் கோவில்.
முக்கிய ரயில் சந்திப்பும், விமான நிலையமும் இங்குள்ளது விரைவுப் பேருந்து வசதியும் உண்டு.

தங்கும் வசதி :

2 மற்றும் 3 நட்சத்திர ஓட்டல்கள்.

ஏர்க்காடு

(சென்னையிலிருந்து 326 கி.மீ.)

காண வேண்டிய இடங்கள் :

அண்ணா பூங்கா
படகுப் பயணத்திற்கேற்ற அழகிய ஏரி
சீமாட்டி மேடை View point.

அருகிலுள்ள விமான நிலையம்

திருச்சிராப்பள்ளி 188 கி. மீ. சேலம் ரயில் சந்திப்பு 32 கி மீ.
சென்னையிலிருந்து ஏர்க்காடு விரைவுப் புகைவண்டி சேலம் வரை உண்டு சேலத்திலிருந்து விரைவுப் பேருந்து வசதி உண்டு.

தங்கும் வசதி :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு, நகரிய விடுதி—தனியார் விடுதிகள்.

கோடைக்கானல்

(சென்னையிலிருந்து 509 கி. மீ.

காண வேண்டிய இடங்கள் :

எழில்மிகு மலைப்பகுதி, தூண்பாறைகள் பிரியண்ட் பூங்கா, அழகிய ஏரி, கோக்கர்ஸ் நடைபாதை, குறிஞ்சி ஆண்டவர்கோவில் வானிலை ஆராய்ச்சி நிலையம், தொலைநோக்காடிகள்.

அருகிலுள்ள விமான நிலையம் :

மதுரை 120 கி. மீ. புகைவண்டி நிலையம் திருச்சிராப்பள்ளி-மதுரை புகைவண்டிப்பாதையில் 'கோடைரோடு, பேருந்து வசதிகள் உண்டு.

தங்கும் வசதி :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு, தனியார் ஓட்டல்கள்.

உதகமண்டலம் (ஊட்டி)

(சென்னையிலிருந்து 559 கி. மீ)

காண வேண்டிய இடங்கள் :

தாவரஇயல் பூங்கா, தொட்ட பெட்டா அழகிய ஏரி.

அருகிலுள்ள இடங்கள் :

முதுமலை காட்டுவிலங்குகள் புகலிடம் (60 கி. மீ) குன்னூர் (19 கி. மீ) கோத்தகிரி (29 கி. மீ) அருகிலுள்ள விமான நிலையம் கோயம்புத்தூர்.
உதகமண்டலத்திற்கும், குன்னூருக்கும் மேட்டுப்பாளையத்திலிருந்து புகைவண்டிப் பயண வசதியும் உண்டு.
கோவை, மைசூர் ஆகிய நகரங்களிலிருந்து பேருந்து வசதியுண்டு.

தங்கும் வசதி :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு, தனியார் ஓட்டல்கள்

மாமல்லபுரம்

(சென்னையிலிருந்து 60 கி. மீ)

காண வேண்டிய இடங்கள் :

எழில்மிகு கடற்கரை, குடவரைக் கோவில்கள், சிற்பப் பாறைகள்.

அருகிலுள்ள இடங்கள் :

கோவளம், திருக்கழுக்குன்றம்.
சென்னையிலிருந்து சாலை வழியே செல்லலாம்.

தங்கும் வசதி:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை குடில்கள், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அசோகா ஓட்டல் மற்றும் தனியார் ஓட்டல்கள்

இராமேசுவரம்

(சென்னையிலிருந்து 633 கி மீ)

காண வேண்டிய இடங்கள் :

இராமநாதசாமி திருக்கோவில்
கோதண்டராமர் திருக்கோவில்
கந்தமாதனபர்வதம்

அருகிலுள்ள இடங்கள் :

குருசடைத் தீவு.

அருகிலுள்ள விமான நிலையம் :

மதுரை 173 கி. மீ. சென்னையிலிருந் புகைவண்டி, பேருந்து வசதி உண்டு.

தங்கும் வசதி :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு. கோவில் குடில்கள்.

கன்னியாகுமரி

(சென்னையிலிருந்து 675 கி. மீ)

காண வேண்டிய இடங்கள் :

கன்னியாகுமரி கோவில், காந்தி நின மண்டபம், விவேகாநந்தர் நினைவ மண்டபம் முக்கடல் சங்கமம், முழு தோற்றமும் கதிரவன் மறைவும்.

அருகிலுள்ள விமான நிலையம் :

திருவனந்தபுரம் (86 கி.மீ)
புகைவண்டி, பேருந்து வசதியும் உ

தங்கும் இடங்கள் :

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு, ஓட்டல், கோவில் குடில்கள், தனி ஓட்டல்கள்.

ஒகேனக்கல்

(சென்னையிலிருந்து 342 கி.மீ.)

காண வேண்டிய இடங்கள் :

நீர்வீழ்ச்சி.

அருகிலுள்ள விமான நிலையம் :

பெங்களூர் (182 கி.மீ.) தர்மபுரிய சாலை வழியில் இணைந்துள்ளது.

தங்கும் வசதி :

தமிழநாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ் நாடு.

குற்றாலம்

(சென்னையிலிருந்து 560 கி. மீ.)

அருகிலுள்ள விமான நிலையம் :

மதுரை 100 கி.மீ.—
புகைவண்டி நிலையம் ;—
தென்காசி-5 கி மீ.

மேலும் பயணத் தகவல்களுக்கு :

1. **தமிழ்நாடு அரசு சுற்றுலா அலுவலகம். 143, அண்ணா சென்னை-600 002.**
2. **பொதுமக்கள் தொடர்பு தமிழ் நாடு சுற்றுலா வளர் கழகம். 'சிவாலயா' 16, கட -இன்சிஃப் சாலை, சென்னை-600 105 (தொலை பேசி: 89581)**
3. **மத்திய அரசு சுற்றுலா அலுவல 154, அண்ணாசாலை, சென்னை-600 002. (தொலை பேசி: 86240)**

PRINTED AT PRASAD PROCESS PRIVATE LTD. MADRAS-

U8.211
190464
190464

தமிழ்நாடு
வரைபடம்
பம்பாய்க்கு
ஆந்திரப் பிரதேசம்
தில்லிக்கு
கல்கத்தாவிற்கு
அரக்கோணம்
சென்னை
பங்களூர்
பாலாறு
காஞ்சிபுரம்
வேலூர்
கோவளந்தாங்கல்
ஓசூர்
ஏலகிரி
செங்கல்பட்டு
மாமல்லபுரம்
வேடந்தாங்கல்
திருக்கழுக்குன்றம்
கிருட்டிணகிரி
திருவண்ணாமலை
கருநாடகம்
தருமபுரி
திண்டிவனம்
சாத்தனூர் அணை
செஞ்சி
ஒகேனக்கல்
திருவக்கரை
ஆரோவில்
பந்திபூர்
புதுச்சேரி
மேட்டூர்
முதுமலை
ஏர்க்காடு
கடலூர்
சேலம்
பிச்சாவரம்
உதகமண்டலம்
சிதம்பரம்
கங்கைகொண்டசோழபுரம்
குன்னூர்
நாமக்கல்
பூம்புகார்
ஈரோடு
கும்பகோணம்
கோயம்புத்தூர்
காவிரி
காரைக்கால்
திருவரங்கம்
தஞ்சாவூர்
நாகூர்
திருச்சிராப்பள்ளி
நாகப்பட்டினம்
வேளாங்கண்ணி
ஆனைமலை
பழநி
சித்தன்னவாசல்
புதுக்கோட்டை
கோடிக்கரை
குடுமியாமலை
கோடைக்கானல்
வைகை அணை
ஆவுடையார்கோயில்
கேரளம்
மதுரை
வைகை
தேக்கடி
திருவில்லிபுத்தூர்
இராமநாதபுரம்
இராமேசுவரம்
மண்டபம்
குருசடைத்தீவு
பாஞ்சாலங்குறிச்சி
அரபிக்கடல்
குற்றாலம்
தூத்துக்குடி
திருநெல்வேலி
தாமிரபரணி
வங்காள விரிகுடா
திருவனந்தபுரம்
மண்டந்துரை
திருச்செந்தூர்
கோவளம்
நாகர்கோயில்
சுசீந்திரம்
கன்னியாகுமரி
இந்துமகா சமுத்திரம்
குறிப்பு
சென்னை மாநிலத் தலைநகர்
கடலூர் மாவட்டத் தலைநகர்
தேசிய நெடுஞ்சாலை
மாநில நெடுஞ்சாலை
புகைவண்டிப்பாதை
விமான மார்க்கம்
விமான நிலையம்
துறைமுகம்
கலங்கரை விளக்கம்
குளிப்பதற்கேற்ற கடற்கரை
ஓய்வு/விடுமுறைக்கேற்ற இடம்
உல்லாசப் பயணத்திற்கேற்ற இடம்
குறிஞ்சி நகர்
நீரருவி
அணைக்கட்டு
தொல்பொருள்/சரித்திரச்சின்னம்
ஓட்டல் தமிழ் நாடு
அசோக் ஓட்டல்
கோவில்
தேவாலயம்
காட்டு விலங்குகள் புகலிடம்
மசூதி
சுற்றுலா அலுவலகம்

கபாலீசுவரர் திருக்கோவில், சென்னை.

தமிழ்நாடு அரசு சுற்றுலாத்
துறையால் வெளியிடப்பட்டது.
சென்னை - 600 009 டிசம்பர் 1980, 10,000 பிரதிகள்